# எரிமலை



பங்குனி 1993

P'RAYA
67 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR
SEINE FRANCE

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



16.01.1993 அன்று விரமரணமடைந்த கேணல் கிட்டுவினதும், ஏனைய ஒன்பது போராளிகளினதும் நினைவாக எழுப்பப்பட்ட நினைவுநடுகல்லை தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் நாட்டி மலர்வளையம் சாத்தி அஞ்சலி செய்தார்.

இவ் நினைவு நடுகல் கிட்டண்ணாவின் தாயாரால் திரைநீக்கம் செய்துவைக்கப் பட்டது

# எரிமலை

கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

பன்னிரெண்டாம் ஆண்டு

பங்குனி 1993


www.tamilarangam.net

## இந்தியாவின் சண்டித்தனம்

அனைத்துலகச் சட்டங்களை மீறி, கேணல் கிட்டுவினதும், ஏனைய போராளிகளினதும் வீரச்சாவுக்கு காரணமாக இருந்த இந்திய அரசு, அக்குற்றங்களிலிருந்து தப்பிக்க முயல்கின்றது. தனது கடல் எல்லைக்குள் கிட்டு சென்ற கப்பலைத் தடுத்து, அதனைப் பரிசோதிக்கவும், அதிலிருந்தவர்களை சரணடைய வைக்கவும் இந்தியக் கடற்படை எடுத்த முயற்சியின் போது, கிட்டுவும், ஏனையோரும் தற்கொலை செய்துகொண்டதாக இந்திய அரசு நிரூபிக்க முயன்று தோல்வி கண்டுள்ளது. தற்போது, சென்னை உயர்நீதிமன்றத்தில் இந்திய அரசாங்கமானது கிட்டு சென்ற கப்பலை 440 கடல் மைல்களுக்கப்பால்தான் தனது கடற்படை தடுத்து நிறுத்தி, காவலுடன் சென்னைத் துறைமுகம் நோக்கிக் கொண்டுவந்ததாகக் கூறியுள்ளதானது நல்லதொரு திருப்பமாகக் கருதப்படுகின்றது. அனைத்துலகச் சட்டங்களுக்கு விரோதமான இம் முதற் செயலை இந்திய அரசு ஒப்புக்கொண்டதன் மூலம், ஏனைய குற்றங்களையும் ஏற்று உலகின் முன்னால் குற்றவாளியாக நிற்கவேண்டிய சூழ்நிலை உருவாகி வருவதாகவே கருதப்படுகிறது. ஆயினும், "அனைத்துலகச் சட்டங்களுக்கெதிராக இக்குற்றத்தைப் புரிந்தேன்; தொடர்ந்தும் புரிவேன்; என்னைத் தட்டிக் கேட்க யார் உள்ளனர்? நான் ஒரு பிராந்திய வல்லரசு; சண்டித்தனம் புரிவது எனது நீதி." என்று அடாவடித்தனமான பதிலை உலகத்திற்குத் தருகிறதா என்பதனையும் நோக்க வேண்டும்.

உலக நாடுகளின் அமைப்பான ஐ.நா.சபையே இக்குற்றங்களை விசாரிக்கவும், நீதிவழங்கவும் தகுதியுடைய அமைப்பு என்ற ரீதியில், விடுதலைப் புலிகளின் செயலகம் ஐ.நா.சபைக்கு விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது. ஐ.நா.சபை, விசேட குழு ஒன்றை அமைத்து, அதனை நீதிமன்றமாகச் செயற்பட வைத்து, இந்திய அரசு புரிந்த குற்றத்தை விசாரித்துத் தண்டனை வழங்குமாறு அதில் கோரப்பட்டுள்ளது. இவ்விண்ணப்பத்தை ஆதரித்து, பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களும், ஏனையோரும், தமது கையெழுத்துக்களை இட்டு ஐ.நா.சபைக்கு அனுப்பியுள்ளனர். மேலும், கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டவர்களை உறவினர்களோ, சட்டத்தரணிகளோ சந்திக்கவிடாது தடுப்பதன் மூலம், இந்திய அரசு சாதாரண சட்டப் பாதுகாப்பைக் கூட அவர்களுக்கு வழங்க மறுக்கிறது. இவ்வாறு வெளித்தொடர்பில்லாத முறையில் வைக்கப்பட்டுள்ளதானது, கொடுர சித்திரவதைகளுக்கு உள்ளாகலாம் என்ற சந்தேகத்தை எழுப்பி உள்ளது. சென்னை உயர் நீதிமன்றத்தில், கப்பலால் குதித்தவர்களை காப்பாற்றியதாக இந்திய அரசு கூறியுள்ளது. காப்பாற்றியவர்களை ஏன் கைதிகளாகத் தடுத்து வைத்திருக்கிறது என்பது புரியவில்லை. இதுவும் இன்னொரு அடாவடித்தனம். இம் மனித உரிமைகள் மீறல் குறித்து, ஜெனிவாவில் ஐ.நா.சபையின் மனித உரிமைக் கமிஷனில் உரையாற்றிய, அமெரிக்க அனைத்துலக மனித உரிமை சட்டத்தரணி திருமதி கரன் பாக்கர் இதனை வன்மையாகக் கண்டித்துள்ளார்.

மேற்கத்தைய நாடுகளின் மத்தியஸ்தத்தை நோக்காகக்கொண்டு முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சியில், ஏதோ ஒரு வகையில், இந்தியாவின் பங்களிப்பும் அவசியம் என உணரப்பட்டது. அதன் பிராந்திய முக்கியத்துவமே அதற்குக் காரணமாக இருந்தது. சமாதான முயற்சி தொடர்பாக மேற்கொள்ளப்படும் பயணங்களின் போது, இந்தியா, பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்கும் உறுதி மொழியப்பட்டது. ஆயினும் சமாதான முயற்சியின் பொருட்டு தளபதி கிட்டு செல்வதாக அறியவந்த போதிலும், அவரைப் பலவந்தப்படுத்தியதன் மூலம், அவரது மரணத்திற்கும், சமாதான முயற்சி பின்தள்ளப்படுவதற்கும் இந்தியா. காரணமாக இருந்துள்ளது. தளபதி கிட்டு சென்ற கப்பல் ஆயுதங்களைக் காவிச் சென்றதாகக் கூறும் கூற்றானது, இந்தியாவின் செயலுக்கு நியாயம் கற்பிப்பதாக அமையாது. சமாதான முயற்சியை தடுத்து நிறுத்துவதானது, அதில் ஈடுபடுவோரின் உயிர்களுக்கு தீங்கு விளைவிப்பதானது, போர்க் குற்றங்களாக (War crimes) கருதப்படுகின்றது. சமாதான முயற்சியை தடுத்து நிறுத்தியதன் மூலம், இந்தியா என்ன செய்துள்ளது? தமிழீழ மக்கள் மீது பிரகடனப்படுத்தாத இன்னொரு போரைக் கட்டவிழ்த்து விட்டுள்ளதா? ஏனெனில், அனைத்துலகச் சட்டங்களுக்கு அமைய, போரில் ஈடுபடும் நாட்டுக்கு எதிரான செயல்போன்ற ஒன்றையே இந்தியா செய்துள்ளது. இந்தியாவின் இப்போர் நடவடிக்கையை எதிர்கொள்ளுமாறு இந்தியா உலகத் தமிழர்களை நோக்கிச் சவால்விடுவதாகவே படுகின்றது.


ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

**எரிமலை**
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C - France.
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 43 58 11 42


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## அனைத்துலக மகளிர் நாளையொட்டி தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் விடுத்த அறிக்கையிலிருந்து....

ஒரு விடுதலை இயக்கத்துடன் அணிசேர்ந்து கொள்வதன் மூலமே பெண்ணினம் தனது விடுதலை நோக்கிய இலட்சியப் பாதையில் வெற்றிபெற முடியும். பெண்விடுதலைக்கு களம் அமைத்துக்கொடுத்திருக்கும் எமது புரட்சி இயக்கத்துடன் பெண்ணினம் அணிசேரும் பொழுதுதான் எமது போராட்டமும் முழுமை பெறும்.

எமது சமுதாய அமைப்பில் நிலவிவரும் ஒடுக்குமுறை அழுத்தங்களிலிருந்து பெண்ணினம் விடுதலைவேண்டி நிற்கின்றது. நீண்ட நெடுங்காலமாக எமது சமூகத்தில் வேரூன்றி வளர்ந்த மூடநம்பிக்கைகளும், இந்த மூடநம்பிக்கைகளிலிருந்து தோற்றம்கொண்ட சமூக வழக்குகளும், சம்பிரதாயங்களும் எமது பெண்களின் வாழ்க்கையைச் சீரழித்துவருகின்றது. ஆணாதிக்க அடக்குமுறைகளாலும் வன்முறையாலும் சாதீயம், சீதனம் என்ற கொடுமைகளாலும் தமிழீழப் பெண்ணினம் விபரிக்கமுடியாத துன்பங்களை அனுபவித்து வருகின்றது.

இந்த ஒடுக்குமுறைச் சிறையிலிருந்து விடுதலை பெறுவதானால் பெண்ணினம் முதலில் தனக்கு எதிராக ஏவப்பட்டுவரும் ஒடுக்குமுறையின் தன்மைகளைப் புரிந்துகொள்ள வேண்டும். தனது சீரழிந்த வாழ்க்கை நிலையைச் சீரமைத்துக் கொள்வதாயின், பெண்ணினம் தனது இழிநிலை பற்றி விழிப்புக்கொள்ள வேண்டும். தலைவிதி என்றும், கர்ம வினையென்றும், தனக்காக விதிக்கப்பட்ட மனுநீதியென்றும், பழமையென்றும், பண்பாட்டுக் கோலமென்றும்காலம் காலமாக மனவுலக இருளுக்குள் முடங்கிக் கிடந்த பெண்ணினம் விழித்தெழ வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நல்லூர் இராசதானி

யமுனாரி

தமிழ் மன்னர்களின் ஆட்சியில் தலைநகராக விளங்கிய நகர்களுள் நல்லூர் மிக முக்கிய இடத்தினை வகிக்கின்றது. நல்லூர் நகரம் அக்காலத்தில் கோப்பாய், வண்ணார் பண்ணை, தற்போதைய யாழ்ப்பாண நகரப்பகுதி ஆகிய இடங்களை உள்ளடக்கியதாக இருந்தது. இந்நகரம் பிறரால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களில் இருந்து பாதுகாக்கக் கூடிய, ஏனைய பிரதேசங்களுடன் தொடர்புகொள்ளக் கூடிய வகையிலும் கேந்திர முக்கியத்துவம் மிக்கதாக இருந்தது.

நல்லூர் இராசதானி அழிக்கப்பட்டு மூன்றரை நூற்றாண்டுகள் மட்டுமே கழிந்துள்ளன. ஆயினும் அதன் எச்ச சொச்சங்கள் மிகவும் அரிதானவையாகவும், அதிகம் அறியப்படாததாகவும் இருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

ஆனால் வயல் வளங்களும், செழிப்பும் மிக்கதாக விளங்கிய நல்லூரில் அமைக்கப்பட்டிருந்த இராசதானி சமகாலங்களில் ஏனைய இராசதானிகள் அமைந்திருந்தது போன்று தரமானதாக அமைந்திருந்தது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. இதனை யாழ்ப்பாண வரலாறுகள் பற்றிக் கூறும் நூல்களான கைலாய மாலை, யாழ்ப்பாண வைபவமாலை போன்ற நூல்களும் போர்த்துக்கேய இலக்கிய நூல்களும் குறிப்பிடுகின்றன.

கைலாயமாலை, நல்லூரில் அமைக்கப்பட்ட அரண்மனை மதில்களால் சூழப்பட்டதாகவும், தூண்கள் நிறைந்ததாகவும், பெரும் முற்றம், சாளரங்கள் (ஜன்னல்கள்), என்பவற்றைக் கொண்டதாகவும், மொட்டை மாடியுடன் கூடிய மாடிக் கட்டிடத்தைக் கொண்டதாகவும் அமைந்திருந்தது எனக் கூறியுள்ளது. யாழ்ப்பாண வைபவமாலையின் குறிப்புகள், நகரின் நான்கு எல்லையிலும் ஆலயங்கள் அமைந்திருந்தமை பற்றியும், நகரின் உள்ளே கந்தசுவாமி கோயில் அமைக்கப்பட்டமை பற்றியும் குறிப்பிடுகின்றது.

போர்த்துக்கேய நூல்கள், சந்தையொன்றிற்கு மிகவும் அண்மையில் யாழ்ப்பாண அரசர்களின் மாளிகை அமைந்திருந்ததைக் குறிப்பிடுகின்றன. அதுமட்டுமன்றி, கோப்பாயிலும் ஒரு அரண்மிக்க அரசவதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடம் அமைந்திருந்ததைக் குறிப்பிடுகின்றது. இது கோப்பாயின் பழைய கோட்டை என்ற வளவிற்குள் அமைந்திருந்தது என்பதை சுவாமி ஞானப்பிரகாசர் எடுத்துக் காட்டியுள்ளார்.

நல்லூர் இராசதானி 1620 ஆம் ஆண்டில் போர்த்துக்கேயரால் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து முற்றாக அழிக்கப்பட்டது. அரண்மனைக் கட்டிடங்களும், அதற்குள் அமைந்திருந்த ஆலயங்களும் அழிக்கப்பட்டு போர்த்துக்கேயரின் நிர்வாக, மதக் கட்டிடங்கள் அமைக்கப்பட்டன என்பதைப் போர்த்துக்கேய நூல்கள் கூறுகின்றன.

1650களில் நல்லூரில் சிறு குளங்களும், வாசனை மிக்க மலர்களும் நிறைந்திருந்தன எனக் கூறப்படுகின்றது.

இவ்வாறு முற்றாக அழிக்கப்பட்ட நல்லூர் இராசதானியின் எச்ச சொச்சமான ஒரே நிலையமாக இன்று நாம் அறியக் கூடியதாக இருப்பது யமுனாரி எனப்படும் நீர்த்தேக்கமாகும்.

இந்நீர்த்தேக்கம் பற்றிப் பலரும் பலவாறாகக் கூறுகின்றனர். இங்கு அரச மகளிர் நீராடினர் எனப் பொதுவாகப் பேசப்படுகின்றது. ஆனால் அதன் அமைப்புமுறை, அது நல்லூர் அரண்மனையின் ஒரு பாகமாக இருக்கலாம் என எண்ண வைக்கின்றது.

பொதுவாக நீச்சல் தடாகங்கள் வட்டவடிவமாகவோ, சதுர வடிவமாகவோ, நீள்வட்ட, நீள்சதுர வடிவாகவோ அமைக்கப்படுவது வழமையானதாகும். இது 'ப'கர வடிவானதாக உள்ளதோடு, அதன் ஒருபுறம் தூர்ந்தமையைக் காட்டுவதாகவும் அமைந்துள்ளது. ஆதலால் இது அரச வதிவிடத்திற்குப் பாதுகாப்பு அளிக்கும் விதத்தில் அமைக்கப்பட்ட ஒரு அகழியின் பகுதியாக இருக்க முடியுமா? எனச் சந்தேகிக்க வைக்கிறது.

அத்துடன் இந்நீர்த்தேக்கத்தின் ஒருபுறச் சுவர் நேரிய தன்மை கொண்டதாகவும், கட்டிட அடித்தளத்தைக் கொண்ட மறு பகுதிச் சுவர் மென்சாய்வான தன்மை கொண்டதாகவும் அமைந்திருப்பது மேற்படி சந்தேகத்தை மேலும் கூட்டுவதாக உள்ளது.

இப்பகுதியில் டச்சுக்காரர் காலத்தில் ஒரு மதக்கல்லூரி அமைக்கப்பட்டிருந்தமையால், பழைய இராசதானியின் சுவடுகளின் மேல் புதிய கட்டிடங்கள் அமைக்கப்பட்டிருந்தன எனலாம். இது நல்லூர் இராசதானியின் உண்மையான சுவடுகளை அவதானிப்பதில் சில சிக்கல்களை ஏற்படுத்துகின்றன.

ஆயினும் நல்லூர் இராசதானி, மிக அண்மைக்காலம் வரை எமது ஆட்சிபீடமாக நிலவிய பகுதி. பாதுகாக்கப்பட வேண்டும். அவை பற்றிய மேலதிக விபரங்கள் ஆராயப்பட வேண்டும். □□□




**வி**டுதலைப் புலிகளின் சர்வதேசச் செயலகத்தால் "கிட்டு எங்கள் வரலாற்று நாயகன்" எனும் நூல் ஒன்று வெளியிடப்பட்டிருக்கிறது. இந்நூலின் முன் அட்டையை விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கிட்டு லண்டனில் அவர் வசித்த வீட்டு வாசலின் முன் நின்றுகொண்டு இருக்கும் படம் அலங்கரிக்கிறது. அவரின் நினைவுத் துளிகள் நூலின் உள்ளே சிந்தப்பட்டுள்ளன. நூலின் உள்ளே கட்டுரைகள், கவிதைகள், கிட்டண்ணாவின் ஓவியங்கள், அவரது நிழல்படங்கள் என்பன நெஞ்சை நெருடுகின்றன. அவரின் நினைவுகளோடு நூலினுள் நுளைகின்ற இதயங்கள் கனத்து நிற்பதே இந்நூலின் கனதியாக இருக்கின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முதன்மை பெறவேண்டிய தமிழ்த் தேசிய உணர்வு

மு. திருநாவுக்கரசு

தேசியம் என்பது சமூக வாழ்வின் உன்னதமான அம்சங்களில் ஒன்று. இதனால் தேசிய உருவாக்கம், தேசிய வளர்ச்சி என்பன முன்னுரிமைக்கு உரியவையாகின்றன. தேசியம் எல்லா வகையிலும் மனிதனை ஒன்றுதிரட்டிவிடுகின்றது. அரசியற் சமூக ரீதியில் எல்லா மனிதர்களையும் சமத்துவமாக்கி விடுகின்றது. தேசியம் என்பது சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் கோஷங்களை முன்னெடுக்கின்றது. இத்தகைய உள்ளடக்கத்தினால்தான் தேசியமென்பது உன்னதமானதாகக் கருதப்படுகின்றது.

இத்தகைய தேசிய உருவாக்கத்தினை ஒரு சமூகமானது பல்பரிமாண வளர்ச்சிக்கூடாகவே அடையலாம். இது ஒரு நீண்ட வளர்ச்சிப் பாதையக் கொண்டதும், புரட்சிகரமானதுமாகும். யூதர்கள் மிகப்பெரும் இன அழிவின் பின்பே யூத தேசிய உருவாக்கத்தில் ஈடுபடலாயினர். ஐரிஸ்காரரும் தேசிய இன உருவாக்கத்தை ஏற்படுத்தப் பெரும்பாடுபட்டனர். யூதர்களினதும், ஐரிஸ்காரர்களினதும் தேசிய இன அங்க அடையாளங்கள் பல அழிக்கப்பட்ட நிலையில் நவீன தேசிய இனத்துக்குரிய பல புதிய அம்சங்களை எல்லாம் அவர்கள் திட்டமிட்டு உருவாக்க வேண்டியிருந்தது.

இதேபோல பல்வேறு நாடுகளினதும், இனங்களினதும் தேசிய உருவாக்கங்களின் போது அவற்றின் முன்னோடிகள் பெரும் துயரங்களையும், இரத்தம் தோய்ந்த வாழ்வையும் அனுபவிக்க வேண்டியிருந்தது. எல்லாத் தேசங்களினதும் தேசிய உருவாக்கத்தில் சிந்தனையாளர்கள் (புத்திஜீவிகள்) முதலடி எடுத்து வைத்துத் துயரத்தின் முதல் அடியைத் தம் முகத்தில் வாங்கிக் கொள்கின்றனர். பிரான்ஸில் ரூசோ, வால்டயர், மொண்டஸ்கியூ போன்றோரையும், ரஷ்யாவில் ரோல்ஸ்ரோயையும், இந்தியாவில் ஓரளவிற்கு மோகன்றோயையும் இதற்கு உதாரணமாய்க் காட்டலாம். கலை, இலக்கியம், பொருளாதாரம், பண்பாடு போன்ற பல்வேறு அம்சங்கள் சார்ந்த சிந்தனைகளும் செயற்பாடுகளும் இத்துடன் ஒன்று சேர்ந்து விடுகின்றன.

இத்தகைய பின்னணியில் வைத்து ஈழத்தமிழ் தேசிய உருவாக்கத்தையும், வளர்ச்சியையும் பற்றிச் சிந்திக்க வேண்டியது அவசியமாகும். முழு இலங்கை தழுவிய "தேசிய" மாயைக்குள் பொதுவாகத் தமிழ் அரசியல்வாதிகளும், தமிழ்ப் புத்திஜீவிகளும், தமிழ்க் கலைஞர்களும், இலக்கியவாதிகளும் நீண்டகாலமாகவே பெரிதும் சிக்குண்டிருந்தனர் எனலாம். பல கட்டங்களில் நேர்க்கணியமான உபதேசிய வளர்ச்சியை உருவாக்கக்கூட மேற்குறிப்பிட்ட தரப்பினர் முயலவில்லை எனலாம்.


தமிழ்த் தேசியம் நேர்க்கணிய வளர்ச்சியை அடைவதிற்குப் பதிலாக சிங்களபௌத்த பாதிப்பிலிருந்து தன்னைத் தற்காத்துக் கொள்வதற்குரிய வகையில் அரசியல் ரீதியான தற்காப்புத் தேசிய நிலையினை நிலைநிறுத்திக் கொள்ளவே முற்பட்டது. இதனால் அரசியல் அர்த்தத்தில் தற்காப்பை அடிப்படையாகக் கொண்டதாகவே தமிழ்த் தேசியம் உருப்பெற வேண்டியதாயிற்று.

"சுதந்திரத்தின்" பின்பு உபதேசிய அடிப்படையில் அரசியல் அர்த்தத்திலான தமிழ்த்தலைமை உருப்பெற்றிருந்த போதிலும், சமூக, பொருளாதார, கலை, இலக்கிய சிந்தனை அர்த்தத்தில் அது போதிய அளவு உருப்பெறவில்லை.

முழுமைப்பட்ட தமிழ்த்தேசிய அர்த்தத்திற் கூறமுடியாதாயினும், மொழியுணர்வை வெளிப்படுத்தும் வகையிலும், கலை, இலக்கியத் துறைகளிலும் ஒரு சில புத்திஜீவிகள் அடியெடுத்து வைத்திருந்தனர். இந்தவகையில் காலம் சென்றவர்களான பேராசிரியர் சு. வித்தியானந்தன், வண. தனிநாயகம் அடிகளார் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஆனால், பொதுவான புத்திஜீவிகளின் போக்கு தமிழ்த் தேசியத்தை நிலைநிறுத்தும் வகையதாய் அமையவில்லை. பெருமளவுக்கு முழு இலங்கை தழுவிய தேசியச் சிந்தனையே வலதுசாரி, இடதுசாரிச் சிந்தனையாளர்களிடம் காணப்பட்டது. குறிப்பாகக் கலை, இலக்கியச் சிந்தனைத் துறையில் பெரும் ஆதிக்கம் வகித்த பல்கலைக் கழகங்களை மையமாகக் கொண்ட மாக்ஸிஸ "பண்டிதர்கள்" www.tamilarangam.net இலங்கை தழுவிய தேசியத்தைப் பிரதிபலித்தவர்களாக மட்டுமன்றித், தமிழ்த் தேசியத்திற்கு எதிரானவர்களாயும் காணப்பட்டனர். இலக்கியத் துறையில் இந்திய மூன்றாம் தர இலக்கியங்களுக்கு எதிராகவே ஈழத்து இலக்கியம் என்ற ஒன்றை வளர்ப்பதில் இவர்கள் முன்னேற்றகரமான பங்கை ஆற்றிய போதிலும், இலங்கை தழுவிய சிந்தனையைத்தான் இவர்கள் பிரதிபலித்தனரே தவிர தமிழ்த்தேசிய குணாம்சத்தையல்ல.

பொதுவாகத் தமிழ்ப் புத்திஜீவிகளின் நலன்கள் அரச சார்பிலோ அன்றி அரச எதிர்ப்பின்மையிலேயோதான் தங்கியிருந்தன. இது வலதுசாரி, இடதுசாரிப் புத்திஜீவிகள் அணிகள் இரண்டிற்குமே பொருந்தும். தமிழிற் தோன்றிய மாக்ஸிஸ பண்டிதர்கள் பலரை மாக்ஸிஸத்தின்பால் மட்டும் புரிந்து கொள்ளாது, அரச சார்பு பதவி நிலையின்பால் வைத்துப் புரிந்து கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். அவர்களின் மாக்ஸிஸ முலாமிற்கு இப்படி ஓர் அர்த்தமும் உண்டு. இதனால் தமிழ் தேசிய ஓட்டத்திற்கு எதிர் முனையிலான கலை, இலக்கியங்கள் 1960கள், 1970களில் முதன்மை நிலை அடைந்தன.




ஏறக்குறைய நாலரை நூற்றாண்டுகளாக காலனித்துவ அடிமை முறையிலிருந்த இலங்கை காலனித்துவ எதிர்ப்பு போராட்டத்தின் மூலம் தன்னைப் புடமிடாது வெள்ளையர்கள் தூக்கிக்கொடுத்த அடிமைக் கனியைச் சுதந்திரம் எனப் பெயரிட்டுப் புசிக்கலாயினர். இதனால் காலனித்துவ சிந்தனை முறையும் வாழ்க்கை ஓட்டமும் இலங்கையர் மத்தியில் இறுகிப் போயுள்ளது.

தமிழ்த் தேசியத்திற்கும், தமிழ் இலக்கியத்திற்கும் இடையில் பெரும் இடைவெளி உண்டு என்று காலம்சென்ற பேராசிரியர் க. கைலாசபதி யாழ். பல்கலைக்கழகத்தில் கருத்தரங்கொன்றில் உரையாற்றுகையில் கூறினார். (1982ஆம் ஆண்டிற்கு முற்பட்ட பகுதியாக இருக்கலாம்) அப்போது சாருமதி என அழைக்கப்படும் பல்கலைக்கழக மாணவன் எழுந்து "இவ்விடைவெளிக்கு யார் பொறுப்பு?" எனக் கைலாசபதியைப் பார்த்துக் கேள்வி எழுப்பினார். தடுமாறிய கைலாசபதி, "எல்லோரும் பொறுப்பு" என்றொரு சப்பைக்கட்டுப் பதிலை அளித்தார். உண்மையில் தமிழ்த்தேசியத்தை பிற்போக்கானது என மாக்ஸிஸப் பண்டிதர்கள் விளக்கி வந்ததால், தமிழ்த் தேசிய விடயங்களைத் தொடப் பல எழுத்தாளர்களும், சிந்தனையாளர்களும் அஞ்சினர் அல்லது தயங்கினர். "சேர். பொன். இராமநாதன் தன்னை முழு இலங்கை தழுவிய தேசியத் தலைவனாக ஆக்க முற்பட்டாரே தவிர, தமிழ்த்தேசியத்தின் தலைவனாக அல்ல"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

என்ற கருத்தை எனக்கொரு பிரமுகர் கூறினார். இக்கருத்தில் பெரிதும் உண்மையுண்டு. பொதுவாகச் சமூகப், பொருளாதார, அரசியல் ஆகிய அனைத்தையும் இணைத்த அர்த்தத்தில் தமிழ்த்தேசியம் கருக்கொள்ள முடியாதவாறு தமிழ் முன்னோடிகள் பலரும் காணப்பட்டனர். இவ்வாறாக உயர் குழாத்து முன்னோடிகளின் நலன்கள் தமிழ்த் தேசியத்திற்கு வெளியேயோ அன்றித் தமிழ்த் தேசியத்திற்கு எதிராகவோதான் காணப்பட்டன.


மக்களே வரலாற்றின் நாயகர்கள். இந்த உயர்குழாத்து நலன்களையெல்லாம் மீறிக்கொண்டு தமிழ்த்தேசியத்தின் முள்ளந்தண்டு தன்னை நிமிர்த்தியது. உயர்குழாத்து சமரசங்களுக்கெல்லாம் அது முற்றுப் புள்ளி வைத்தது. மாக்ஸிஸ பண்டிதர்களும் சரி, வலதுசாரி புத்திஜீவிகளும் சரி, முன்னைய தமிழ் அரசியற் தலைவர்களும் சரி இவர்கள் அனைவரும் உயர்குழாத்துச் சமரசவாதிகள்தான். தங்கள் நலன்களுக்காக இலகுவில் எதனுடனும் சமரசம் செய்யக்கூடியவர்கள்.

ஏதோவொரு வகையில் எல்லாத்துறைகளிலும் இத்தகையவர்களே தலைமைத்துவப் பாத்திரம் வகித்ததால் தமிழ்த்தேசியம் பல் பரிமாண வளர்ச்சியை அடையமுடியாத நிலை உருவானது. இவ்வாறாக ஸ்தம்பிதமடைந்த தமிழ்த்தேசிய வளர்ச்சி எல்லாத்துறையிலும் புதிய தலைமுறையின் வருகையை நோக்க வேண்டியதாயிற்று.

இவற்றால் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற அடிப்படையில் ஒரு புதிய தமிழ்த்தேசிய பண்பாட்டையும், தேசிய சமூக ஒருங்கிணைப்பையும் உருவாக்கவேண்டிய பெரும் பொறுப்பு இளம் தலைமுறையின் தோள்களிலும், தலைகளிலும் சுமத்தப் பட்டுள்ளது. இதில் பண்பு ரீதியான வளர்ச்சிக்கு ஒரு சமூகத்தை இட்டுச்செல்வது மிகவும் கடினமான ஒரு பணியேயாகும். புதிய உலக வளர்ச்சியில் நின்றுகொண்டே இத்தேசிய உருவாக்கம் பற்றிய புதிய சிந்தனைகளும் வளர வேண்டும்.

* * *

## பெண் விடுதலை



தென் கிழக்கு ஆசியாவிலேயே பெண்விடுதலைப் போராட்டத்துக்கு உதாரணம் வகிக்கக்கூடிய வகையில் எமது போராட்டம் விளங்குகின்றது.

மகளிர் அமைப்பு, மகளிர் படைப்பிரிவு என்று இரு பிரிவுகளாக இயங்குகின்றது.

பெண்கள் போராட்டத்தில் பங்குபற்றுவதானது சமுதாயத்திலே விழிப்புணர்ச்சியையும், சமூக மாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.



காலங்காலமாக வரலாற்றுரீதியாக பெண் அடிமைத்தனத்தில் ஊறிப்போயிருந்த எமது இனத்தில் இன்று பரவலான விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது.

எமது போராட்டம் கண்மூடித்தனமான முறையில் கட்டியெழுப்பப்படவில்லை.

பிற்போக்குத்தனங்களை இல்லாதொழித்து, அறிவு வளர்ச்சியையும், கல்வியறிவையும், மனித வளங்களையும் கூட்டுவதாகவே எமது போராட்டம் நடந்துவருகின்றது.

பிட்டு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அப்புறமாய் வருகிறேன்


ரூபி. மார்க்கிரட்
மன்னார்

அம்மா
இன்று நான்
உன்னிடம் வந்த போது
வீட்டு முற்றத்தில் பதிந்த என்
பாதச் சுவடுகளைப்
பாதுகாத்து வை
நாளை நான்
வருவேன் என்பது
என்ன நிச்சயம்
அப்படியிருக்க....
அப்பாவிற்கும்
வயதாகி விட்டதென்று
திக்கித் திணறி சொல்கிறாய்
கன்றுக்கு
புல் சேர்த்து வைத்து
பசுவொன்று இறந்ததாய்
வரலாறு கிடையாது; அதனால்
கவலையை விடு.
விழி நீர்
வழிந்து விடும் என்றுதானே
நீர் கோர்த்த
கண்களுடன்; என்னை
நிமிர்ந்து பார்க்காமல்
குமுறுகிறாய்
சான்றோன்
எனக் கேட்ட தாய்
அப்போது அது பழமொழி.
உனக்குத் தெரியுமா?
மாவீரன்
எனக்கேட்டதாய்
இது இப்போது
நான் விரும்பும் புதுமொழி.
அம்மா
வேதனையை
குத்தகை எடுத்து
குனிந்திருந்த உன் தலை
அப்போது
ஆனந்தக் கண்ணீரோடு
நிமிர்ந்து நிற்கும்.
கொள்ளி வைக்க
பிள்ளை இல்லை என்று
அப்பா புலம்புவதாய்; நீயும்
சேர்ந்து புலம்புகிறாய்.
அவரிடம் கூறு
சந்தனக் கட்டையில் வேக
நாம் ஒன்றும்
நேரு பரம்பரை அல்ல
சுதந்திரமாய்



எரியக் கூட நமக்கு
உரிமை இல்லை,
அம்மா புரிந்து கொள்
அந்நியன்
மறுத்துள்ள சுதந்திரம்; நம்
சுடலைக்கும் சேர்த்துத்தான்
எம் மண்ணின்; கடல்
கரைகளில் பதிந்துள்ள
அந்நியத் தடயங்களை
அழித்து விட்டு
அப்புறமாய் வருகிறேன்
அப்பாவின்
அஸ்தியை அள்ளிப்போய்
கடலில் கரைப்பதற்கு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

# ஆமி வருகுது... நேவி வருகுது... பொலிசும் வருகுது...

# "இனியென்னடா... வான்படை தானே..."

**நொ**வம்பர் 27ம் நாள்.

தமிழர்களின் நினைவினில் நீங்காத நாள். நேரம் மாலை 3.00 மணி. மாரிகாலத்து மாலைப் பொழுதாகினும் மப்பும் மந்தாரமுமற்ற தெளிவான வானம்.

யாழ். பலாலி வீதியைக் குறுக்கறுத்து, கந்தர்மடம் சந்தியால் செல்கின்ற தெரு மக்கள்கடலால் நிறைந்திருந்தது. கந்தர்மடம் பாடசாலைக்கு முன்பாகச் செல்கின்ற அவ்வீதியில் அணிவகுத்து நிற்கின்றன தமிழீழப் படையணிகள்.

முன்னே வரிப்புலிச் சீருடையில் வாத்திய இசைக்குழு. அடுத்து, புலிப்படையின் ஆண், பெண் போராளிகளின் படையணிகள். அடுத்து, கடற்புலிகளின் ஆண், பெண் போராளிகளின் படையணிகள். தொடர்ந்து ஆண்களும் பெண்களுமாக தமிழீழக் காவற்துறையினர். பின்னால் '50 கலிபர்' கனரக இயந்திரத் துப்பாக்கி பொருத்தப்பட்ட காவல் வண்டியும், நவீன ரக ஆயுதங்களைத் தாங்கிய போராளிகளும்.

ஆளை ஆள் விலக்கி ஒருவரை ஒருவர் முந்தி, அந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் காண முண்டியடிக்கின்ற சனக்கூட்டம். வீதி நிறைந்து மதில்கள், மரங்கள், வீட்டுக் கூரைகளிலும் ஏறி, எங்கும் மக்கள்.

கந்தர்மடம் பாடசாலை முன்னால் அணி வகுத்து நின்று எங்கள் படையணிகளின் அணி நடை ஆரம்பமாகி அசையத்துவங்கியது.

உண்மையிலேயே அது தமிழர்களை மேனி சிலிர்க்கவைக்கும் ஒரு காட்சி. எமது விடுதலைப் போராட்டத்தின் பரிணாம வளர்ச்சியை உலகிற்கு எடுத்துக்காட்டும், ஒரு குறியீடு.

இதே கந்தர்மடம் பாடசாலை

பத்து வருடங்களுக்கு முன்; அது போராட்டம் துளிர்விட்ட காலம். விரல்விட்டு எண்ணக்கூடிய தொகையிலேயே எமது இயக்க உறுப்பினர்கள். இன்று உள்ளதைப் போல் அதி நவீன ஆயுதங்கள் அன்றில்லை.

1983 மே 18ம் திகதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




சிறிலங்கா அரசு உள்ளூராட்சித் தேர்தலுக்கான நாள். தேர்தலுக்கான பாதுகாப்பிற்காக வாக்களிப்பு நிலையங்களில் சிங்களப் படையினர் குவிக்கப்பட்டிருந்தனர். வீதிகளெங்கும் இராணுவ பொலிஸ் வண்டிகள் ரோந்து சுற்றிக்கொண்டிருந்தன.

அது அவர்களின் காலம்.

கந்தர்மடம் சைவப்பிரகாச மகாவித்தியாலயமும் தேர்தல் வாக்களிப்பு நிலையங்களில் ஒன்று.

சீலனின் தலைமையில் சில புலிவீரர்கள் எங்கோ மறைந்திருந்துவிட்டு, திடீரென 3 மிதிவண்டிகளில் வந்திறங்கிய படையினரைத் தாக்குகின்றனர். ஒருவன் கொல்லப்பட அவனின் ஆயுதத்தையும் எடுத்துக்கொண்டு, மறுபடியும் மறைந்துவிடுகின்றனர்.

அது நடந்து முழுமையாக பத்தாண்டுகள் கூட நிறைவேறாத இன்று;

அப்போது ஒரு சில பேராக, ஒரு சில துப்பாக்கிகளுடன் ஒளிந்து வந்து தாக்கிவிட்டு, மறைந்தோடிப்போன அதே வீதியில் தமிழீழத் தேசியப் படையமைப்பாக வளர்ந்த புலிப்படையின் அணிவகுப்பு. அணிநடைக்குப் பாதுகாப்பாக, அதிநவீன ஆயுதங்களுடன் புலிவீரர்கள்; '50 கலிபர்' கனரக இயந்திரத்துப்பாக்கி பொருத்தப்பட்ட வண்டி.

அன்றைய சிறிய தாக்குதலுக்குத் தலைமை தாங்கிய எமது முதலாவது தாக்குதற் பிரிவுத் தளபதி சீலனின் நினைவோடு இன்று எழுந்து நிற்கிறது, எமது முதலாவது மரபுவழிப் போர் அணியான, சார்ள்ஸ் அன்ரனி சிறப்புப் படைப்பிரிவு.

கரும்புலிகள், பெண்புலிகள், கடற்புலிகள், புதிய புதிய சிறப்புப் படைப்பிரிவுகள் என, குறுகிய காலத்திற்குள் எவ்வளவு பெரிய வளர்ச்சி! அப்போது எங்களை வெளியாருக்குத் தெரியாது; இப்போது, நாங்கள் உலகப்பிரசித்தி பெற்ற தலைவனைக் கொண்ட பிரபல்யமான இயக்கம், போர்த்திறனில், வீரத்தில், தியாகத்தில் இன்னும் இன்னும்...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அணிநடை கந்தர் மடச் சந்தியில் திரும்பி திருநெல்வேலி நோக்கி நகர்கின்றது. எங்கும் சனநெரிசல். வீதி நிறைந்து மதில்கள், மரங்கள் நிறைந்து வீட்டுக்கூரைகள், மாடிகள் நிறைந்து மலையெனக் குவிந்திருந்தனர் மக்கள்.

அணிநடை தபாற்பெட்டிச் சந்தியைக் கடந்துகொண்டிருந்தது. சாதாரண வரிச்சீருடையில் புலிவீரர்கள் முன்னால் செல்ல, நீலநிற வரிச்சீருடையில் கடற்புலிகள் அடுத்துச் செல்ல, தமக்குரிய சீருடையில் காவல் துறையினர் இறுதியாகச் சென்றுகொண்டிருந்தனர்.

மக்களுக்குள்ளிருந்து இரண்டு இளைஞர்கள், தமக்குள் பேசிக்கொள்கின்றனர். ஒருவர் அடுத்தவருக்குச் சொல்கிறார்:

"ஆமி போகுது, நேவி போகுது, பொலிசும் போகுது.... இனியென்னடா... வான்படை தானே..."

இப்பொழுதுதான் எமது மக்களுக்கு எவ்வளவு பெரிய நம்பிக்கை!



தமிழீழப் படைகள் அணிவகுத்துச் செல்கின்ற அதைப் பார்த்து மக்கள் பெருமிதத்துடன் கதைக்கின்ற அதே தபாற்பெட்டியடிச் சந்தியில் பத்தேவருடங்களுக்கு முன்

1983 யூலைத் திங்கள் 23ஆம் நாள்

எங்கள் தெருக்களில் சிங்களப் படையினர் சுதந்திரமாகத் திரிந்த காலம். தங்களைக் கேட்க யாருமில்லை என்ற இறுமாப்புடன் அவர்கள் உல்லாசமாக உலாவித்திரிந்த நாட்களில் ஒரு நாள். எங்கள் இயக்கத்தின் மொத்த ஆட்கள் தொகை ஐம்பதை நெருங்காது. இங்கு ஒளித்து அங்கு ஒளித்துத் தலைமறைவாக வாழ்ந்து வளர்ந்த காலம். புலிகளை உலகத்திற்குத் தெரியாது. எங்கோ மறைந்திருந்துவிட்டு, இரவானதும் தபாற்பெட்டியடிச் சந்தியில் வந்து, அருகு வீடுகளுக்கு சிங்களப் படை போல நடித்து, ஏமாற்றி, கண்ணிவெடியைப் புதைத்து, நள்ளிரவில் பலாலியிலிருந்து ரோந்து வந்த படையினரைத் தாக்கி, 13 பேரைக் கொன்று ஆயுதங்களையும் தூக்கிக்கொண்டு ஓடிமறைந்தபோதுதான், புலிப்படையை உலகம் அறிந்தது.

இலங்கைத் தீவையே அதிர வைத்த அந்தத் தாக்குதல் நடந்த போது இன்னுமொரு பத்தே ஆண்டுகளில் அதே தபாற்பெட்டிச் சந்தியில் தமிழரெல்லாம் திரண்டு வாழ்த்த, தமிழீழத்தின் தேசியப்படையமைப்பாக வளர்ச்சியுற்று புலிப்படை வீரர்களின் அணிநடை செல்லும் என, யாரும் கற்பனையில்கூட கண்டதில்லை. மிகக் குறுகிய காலத்திற்குள் போராட்டம் பிரமாண்டமாக வியாபித்து, உலகின் கவனத்தைத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தனது பக்கம் சார்த்து நிற்கும் என, யாரும் நம்பியிருக்கவில்லை.

ஒரு சில துப்பாக்கிகளுடன் அன்று யாருக்கும் தெரியாமல், ஒளிந்தோடிப் போன அதே இடத்தில், இன்று மிகப்பெரிய படையமைப்பாகப் பரிணமித்து, நவீனரக ஆயுதங்களுடன் அணிநடை. அப்போது யார் கண்டுவிட்டால் எமக்குப் பிரச்சனையாகிப் போய்விடுமென்பதற்காக சிங்களப் படைபோல நடித்து ஏமாற்றினோமோ, அதே மக்கள் இன்று அதே இடத்தில் எமக்குப் பின்னால் மலையெனக் குவிந்து..

போராட்டம் வளர வளர மக்களின் மனங்களில் நம்பகத் தன்மையும் வளர்ந்தது. அதனால் தான் 'ஆமி வருகுது... நேவி வருகுது.... பொலிசும் வருகுது...' என்பதோடு நிறுத்தாமல், 'இனியென்ன வான்படைதானே' என, மக்கள் இன்பக் கனவு காண்கிறார்கள்.

அணிநடை திருநெல்வேலிச் சந்தியால் திரும்பி, மருத்துவ பீட வழியாக, மருத்துவ பீட மைதானத்தை அடைகின்றது. மைதானத்தைச் சூழவும் மக்கள் சமுத்திரம், அதன் சுற்றாடலில் கனரக விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளுடன் புலிகளின் நிலைகள்.

இதே மருத்துவ பீட மைதானத்திற்குள் சில ஆண்டுகளுக்கு முன், பெரும் இராணுவ சாதனையை நாம் படைத்திருந்தோம்.

1987ல், எமது தாயக விடுதலைப் போரை அழித்துவிடும் வஞ்சக நோக்கோடு இங்கு வந்த இந்தியப்படை, 72 மணி நேரத்தில் புலிகளை அழித்துவிடுவோம் என்ற இறுமாப்புடன் எம்மீது போர் தொடுத்த போது, இதே மைதானத்தில் இந்தியப்படையணி ஒன்று, முழுமையாக அழிக்கப்பட்டது.

தலைவர் பிரபாகரனின் இருப்பிடத்தைத் தாக்கி, அவரைக் கொல்வதற்கென்று இந்திய இராணுவத்தின் உலங்கு வானூர்திகள் மூலம் தரையிறக்கப்பட்ட, 30 பேர்கொண்ட சிறப்புப் படையணியே இதுவாகும். இந்தியப் படைக்கு விழுந்த முதலாவது பேரிடியாகவும் அது அமைந்தது.

விடுதலைப் புலிகள் படையணியினதும், தமிழீழக் காவல்துறையினதும் அணிவகுப்பு மரியாதை செலுத்தும் நிகழ்வு மைதானத்தில் நடந்துகொண்டிருந்தது. எமது இயக்கத்தின் படைத்துறைத் துணைத்தளபதி திரு. பால்ராஜ் அவர்கள் அணிவகுப்பு மரியாதையை ஏற்கிறார். அவருக்குப் பின்னால் வரிசையாக ஏனைய தளபதிகள்.

திடீரென வானத்தைக் கிழித்துக்கொண்டு வந்து வட்டமிடுகின்றன இரண்டு குண்டு வீச்சு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விமானங்கள்; மக்கள் பதற்றமடைகின்றனர்.

பொம்மர்கள் திரும்பத் திரும்ப



ஆணும், பெண்ணும் ஒத்திசைவாக ஒருவர் ஒருவரின் சுதந்திரத்தையும், சமத்துவத்தையும், கௌரவத்தையும் மதித்து, குடும்ப வாழ்வின் பொறுப்புக்களைப் பகிர்ந்து, சமூகத்தின் மேம்பாட்டுக்கு உழைத்து, பரஸ்பர புரிந்துணர்வுடன் பற்றுக் கொண்டு வாழ்ந்தால் இந்தப் பால் வேறுபாட்டால் எழும் பல்வேறு முரண்பாடுகள் நீங்கும். இந்த அன்புறவின் ஆழமான அர்த்தத்தையும், முக்கியத்துவத்தையும் ஆணினம் புரிந்துகொள்ளும் பொழுதுதான் ஆணாதிக்கமும், அதனால் எழும் அதிகார அடக்குமுறைகளும் அகன்றுவிட வாய்ப்புண்டு.

தலைவர் திரு. வே.பிரபாகரன்

வட்டமிட்டு குண்டு வீசுவதற்கான வாய்ப்பைத் தேடிக்கொண்டிருக்கும் போதும் அணிநடை குழப்பமின்றி நடக்க தளபதிகளும் இயல்பாகவே; ஆனால் கலிபர்கள் தயாராக.

திடீரென, பொம்மர்களில் ஒன்று மேலே கிளம்பி, வேகத்தைக் கூட்டிக் குத்திக்கொண்டு பதிந்து குண்டுவீச வர, பதற்றமடைந்த மக்கள் குழம்பிச் சிதறி ஓட முயல வானத்தை நோக்கி ரவைகள் பொழிந்தன 'பிப்ரிகள்'. சில மணித்துளிகளில், தொடர்ச்சியான பிப்ரிகளின் சடசடப்பு ஓய, விமான இரைச்சல் வானிலிருந்து கேட்கவில்லை.

உடலைப் புல்லரிக்க வைத்து, மனதைப் பெருமிதம்கொள்ள வைத்தன அந்தக் கணங்கள்.

மீண்டும் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் மக்கள் குழும, அணிவகுப்பு மரியாதை தொடர்கிறது.

இன்று, வான்வழி வந்து எங்கள் எழுச்சி விழாவை உடைக்க வந்தவர்கள் விரட்டப்பட்டனர்.

ஆனால், ஏறக்குறைய 19 ஆண்டுகளுக்கு முன், யாழ்ப்பாணத்தில் தமிழ்மொழிக்கு எடுக்கப்பட்ட எழுச்சி விழாவின் போது நடந்ததை எவரும் மறக்க முடியாது.

1974ம் ஆண்டு, சனவரி 10.

அது ஒரு கொடிய நாள்.

கல்விமான்கள், அறிஞர்கள், கலைஞர்கள் தமிழ் ஆர்வலர்கள் எனத் தமிழ்ப் பெருங்குடி மக்கள் திரண்டு யாழ்ப்பாணம் வந்து, வீரசிங்கம் மண்டபத்தில் கூடியிருந்தனர்.

கோலாகலமாக, நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாள் நிகழ்வுகள் நடந்துகொண்டிருந்தன.

ஒரே ஒரு ஜீப் வண்டியில்தான் சிங்களப் பொலிசார் வந்திறங்கினர். ஒரு சில பேர்தான் அவர்களில் இருந்தனர். ஆனால் அனர்த்தம், அட்டூழியம், எங்கும் அவல ஓலம். மின்சாரக் கம்பிகளைச் சுட்டு அறுத்துச் சனக்கூட்டத்தின் மேல் வீழ்த்தினார்கள். கண்ணீர்புகைக் குண்டுகளை வீசினார்கள். அல்லோலகல்லோலப்பட்டு ஓடிய சனக்கூட்டத்தினுள் நெரிந்தும், மின்சாரம் தாக்கியும் ஒன்பது தமிழர்கள் பிணங்களாய்ச் சுருண்டார்கள்.

அன்று 1974ம் ஆண்டு நடந்ததும் ஒரு எழுச்சி விழா; இன்று 1992ம் ஆண்டு நடந்ததும் ஒரு எழுச்சி விழா. அது அவர்களின் காலம் மக்களைக் கொன்றார்கள்.

இது புலிகளின் காலம் மக்களைக் காத்தார்கள்.

எவ்வளவு துரிதமாக, எவ்வளவு தூரத்திற்கு விடுதலைப் போராட்டம் வளர்ந்துவிட்டது!

"மூன்று மாதத்தில் புலிகளை அழித்துவிடுவோம்'' எனக் கர்ச்சித்தவர்களை, "புலிகள் பங்குபற்றாமல் ஒரு பிரச்சினைக்குத் தீர்வை நடைமுறைப்படுத்த முடியாது" என வாய் திறந்து சொல்லவைத்திருக்கின்றது, புலிகளின் வீரம்.

ஒரு தனி அரச நிர்மாணத்தை நோக்கி எமது போராட்டம் விரைந்து செல்கின்றது.

படையமைப்பு, காவற்துறை, புலனாய்வு, அரசியல், நீதி நிர்வாகம், மகளிர் விவகாரம், பொருளாதாரக் கட்டுமானம், கலை, பண்பாடு, தகவல்துறை, நிதிக்கட்டமைப்பு, பொதுநிர்வாகம், போக்குவரத்து என, ஒரு அரசிற்கு இருக்கவேண்டிய அம்சங்களை நோக்கிப் படிப்படியாகப் பரிணமித்து, எங்கள் வீரர்கள் ஊற்றிய இரத்தத்தில் உரம் பெற்று, எங்கள் தலைவனின் உன்னத வழிகாட்டலில் நெறிப்படுத்தப்பட்டு, உலகையே வியப்பிலாழ்த்தி நெடிது நிமிர்கிறது எங்கள் தாயக விடுதலைப் போர்.

**உலகமெங்கும் எதிரொலிக்கின்றது எமது போர்க் குரல்!** □□□

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# விட்டில்கள்

சிறுகதை

ஆதிலட்சுமி

வெளிச்சமில்லாத தெருவின் ஓரங்களில் வெள்ளம் தேங்கி நிற்கிறது. மறுபடியும் மழை வந்து தொலைப்பதற்குள் வீடு போய்ச் சேர்ந்துவிட வேண்டும் என்ற அவசரத்தில்... ஆளுக்காள் மாறிமாறி பெல்லடித்தபடி பறக்கிறார்கள். மின் வெளிச்சமில்லாத மோட்டார் சைக்கிள் ஒன்று புகையைக் கக்கிக்கொண்டு அவளை விலத்திப் போகிறது. மழைநேர இருட்டு நேரத்தோடு பரவிவிட்டிருந்தது. எனினும் வீட்டுக்கு வீடு தெருவை விடுப்புப் பார்க்கும் முகங்கள் தென்பட்டன. முகத்தின் முன்னால் சிரித்துவிட்டு, முதுகுக்குப் பின்னால் நமட்டுச் சிரிப்புச் சிரிக்கும் அந்த முகங்கள் எதையும் பார்க்க விரும்பாமல்.... சாருமதி சைக்கிளை வேகமாக மிதிக்கிறாள். ஒழுங்கை முகப்பில் கிளியன் கடையில் நாலைந்து இளைஞர்கள் சேர்ந்து நின்று கதைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தூரத்தில் வரும்போதே.... படலையருகில் அம்மாவின் முகம் தெரிகிறது. அம்மாவுக்கு முன்னால் சைக்கிளை நிறுத்தி இறங்கினாள் சாருமதி. அம்மா எவ்வளவோ கஷ்டப்பட்டு வார்த்தைகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு வழிவிடுகிறாள். சாருமதி சைக்கிளை உருட்டிக்கொண்டு உள்ளே நுழைகிறாள். விறாந்தையில் விளக்கு ஏற்றப்பட்டிருந்தது.

சாருமதி www.tamilarangam.net மௌனமாக உடை மாற்றிக் கொள்கிறாள். அவளுடைய மௌனமும், செயல்களும் அம்மாவுக்கு எரிச்சலை மூட்டியிருக்க வேண்டும்.

''நீயொரு பொம்பிளைப் பிள்ளையெல்லவோ?"

அம்மா கேட்கிறாள், சுரீரென்று சாருமதிக்குக் கோபம் வந்தது. ஆனாலும் பேசாமல் இருக்கிறாள்.

"இந்த அயலட்டைச் சனமெல்லாம் என்னென்ன கதைக்குதெண்டு தெரிஞ்சால் நீ இப்படி ஆம்பிளைப்பிள்ளையள் மாதிரி நேரஞ்செண்டு வீட்டுக்கு வருவியோ?"

அம்மாவின் குரலில் ஆத்திரம் குறைந்து, இப்போது ஆற்றாமை நிறைந்திருந்தது. சாருமதிக்குக் கோபம் அடங்கி அம்மாமீது அனுதாபம் பிறந்தது.

சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது அம்மா சொன்னாள்;

''அப்போதையும் அவை வந்தவை. நீ இன்னுமொருக்கால் யோசிச்சுச் சொல்லு."

எத்தனையோ தரம் சொல்லியாகிவிட்டது. அம்மா இன்னமும் விளங்கிக் கொள்வதாக இல்லை.

"இந்தா, இது பொடியன்ரை படம். அப்போதை கொண்டுவந்து தந்தவை. நாளைக்கு விடிய அப்பா கொண்ணனுக்கு கடிதம் எழுதப் போறனெண்டவர். நீ நல்லதா ஏதாலும் ஒரு முடிவைச் சொன்னால்தானே எழுதலாம்."

அம்மா கையில் வைத்திருந்த வெளிநாட்டுக் கடித உறையை சாருமதியின் மேசையில் வைத்து விட்டுப் போகிறாள்.

அப்பா வந்துவிட்டார். வெளியே அவர் செருமுகின்ற சத்தம் கேட்கிறது. தூரத்தில் எங்கோ நாய்கள் குரைத்தன. அம்மா இன்னமும் நித்திரையாகவில்லை. விறாந்தையில் விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. அம்மா பாவம். குடும்பத்துக்காக நெய்யாக உருகிறாள். மழையென்றாலென்ன, பனியென்றாலென்ன விடியற்காலை நான்கு மணிக்கு அவள் உடல் என்ற இயந்திரம் இயங்க ஆரம்பிக்கும். இரவு பத்து, பதினொரு மணி வரை அந்த இயந்திரம் சுழன்றபடி இருக்கும்.

குளிக்கத் தண்ணீர் நிரப்புவதிலிருந்து.... எரிக்க விறகு கொத்துவதுவரை எல்லாமே இந்த வீட்டில் அம்மாதான். அப்பா காலையில் எட்டு முப்பதுக்குப் போனால், மாலை ஆறு மணிக்கு வருவார். அவ்வளவுதான். அம்மா ஒருநாள் கூட நோய் என்று படுத்தது கிடையாது. நோய் வருவதில்லை என்று அர்த்தமல்ல. நோய் வந்தாலும் அம்மா ஓய்ந்தது கிடையாது. அம்மாவை நினைக்க நெஞ்சுக்குள் வலிப்பதுபோல் இருந்தது.

ஒழுங்கையில் யாரோ கதைத்தபடி நடந்து போகிறார்கள். இவ்வளவு நாளும் வெறிச்சோடிப் போய்க் கிடந்த ஒழுங்கை, மயிலர் வீட்டில் போராளிகள் முகாம் அமைத்த பிறகு கலகலப்பாகி விட்டிருக்கிறது. இரவில் பல தடவைகள் மோட்டார் சைக்கிள்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வருவதும் போவதுமாக இருக்கும்.

சாருமதி, அம்மா வைத்துவிட்டுப்போன படத்தை எடுத்துப் பார்த்தாள். மீசையில்லாத முகத்துடன் ஒரு இளைஞனின் படம். அவளுக்கு அருவருத்தது. கூடவே அந்த இளைஞனின் மீது பரிதாபமும் ஏற்பட்டது. அவன் அணிந்திருந்த கையில்லாத பனியனில் தலைமயிர்கள் காற்றில் பறக்கும் வெள்ளைக்காரப் பெண்ணொருத்தியின் ஓவியம். அவன் கழுத்தில் ஒரு கட்டைச் சங்கிலி. 'ஓ'வென்று அவன் சிரித்துக் கொண்டிருந்தான். சாருமதி மேசையில் அப்படத்தை வைத்தாள். இன்னொரு படமும் இருந்தது. பரந்த பூந்தோட்டம் ஒன்றின் முன்னால் காரில் சாய்ந்தபடி அதே இளைஞன் நின்றான். முதல் பார்த்த படத்தில் இருந்ததைவிடக் குண்டாகவும் நிறமாகவும் தெரிந்தான்.

அந்நியநாட்டில் இவ்வளவு ஆடம்பரமாக இருக்கும் இவனால் தன் மன உணர்வுகளை, சின்னச் சின்னக் கனவுகளைப் புரிந்து கொள்ள இயலுமா? என ஒரு கணம் சாருமதி நினைத்துப் பார்க்கிறாள்.

தினமும் வேலைக்குப் போகும் போதும் வரும்போதும் மரங்களின் கீழே காணும் அந்த அகதிச் சனங்களுக்காகத் தன் மனம் அழுமே, இதை இவனால் புரிந்து கொள்ள இயலுமா? கேள்விக் குறிகளால் நிரம்பிக் கிடக்கும் எதிர்காலத்தோடு, வறுமைக்குள் வாடும் அந்தச் சின்னஞ்சிறுசுகளுக்காகத் தன் உயிர் உருகுமே. இதை இவன் விளங்கிக் கொள்வானா? இவனால் மட்டுமல்ல எவராலும் கூடத் தன்மன உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியாதென்றே அவளுக்குத் தோன்றியது. திருமணம் என்பது ஆத்மார்த்தமான அன்புப் பிணைப்பாக இருக்க வேண்டும் என்றே நினைத்தவள் சாருமதி. திருமணத்தின் மூலம் அறிமுகமாகும் அந்த முகம், www.tamilarangam.net வாழ்வின் துன்பியல் யாவற்றையும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தவள். ஆனால், அனைத்தையும் பணம் என்ற ஒன்றுக்குள் போட்டுப் புதைத்திட வல்லவா அம்மா நினைக்கிறாள். இந்த அலங்காரங்களும், ஆடம்பரங்களும் வாழ்வைப் பூரணப்படுத்திவிடுமா? என்றெல்லாம் சாருமதியின் எண்ணங்கள் ஏக்கங் கொண்டன.

காலையில் எழுந்து கதவைத் திறந்தபோது அம்மா இரங்கிய படி நின்றுகொண்டிருந்தாள். உயிர்பெற்று உலாவுகின்ற எலும்புக்கூடு போன்ற அவள் உருவம் சாருமதியிடம் கெஞ்சும் பார்வையொன்றை அனுப்பியது. இன்னமும் அம்மா அதே நிலையில்தான் நின்றாள். அம்மாவைக் கவனியாதது போலச் சாருமதி நடந்து கொண்டாள். அப்பா அவளது அறை வாசலைக் கடந்து நாலைந்து தூரம் போய் வந்தார். எல்லோரும் சேர்ந்து தன்னை ஏதோவொரு படுகுழியில் விழுத்த வியூகம் அமைப்பதாகச் சாருமதி உணர்ந்தாள்.

வேலைக்குத் தயாராகி வெளியே வந்தபோது அம்மாவிடம் அந்த படங்களை நீட்டினாள் சாருமதி. அப்படங்களை அவள் தொட்டுவிட்டதில் அம்மாவுக்கு பரம ஆனந்தம். அப்பா சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

"அப்ப ஒரு நல்ல நாளிலை அவையளைச் சாப்பிட வரச் சொல்லுங்கோ"

ஆயிரம் சூரியன் உதித்த பிரகாசம் நிறைந்த மகிழ்வோடு அம்மா அப்பாவிடம் சொன்னாள்.

"எனக்கு இதில விருப்பமில்லை..."

அந்த மகிழ்வுக் கோட்டையை நொருக்கும் குண்டாய் உறுதியோடு விழுந்தது சாருமதியின் பதில்.

அதிர்வில் அம்மாவின் மனம் சுருண்டிருக்க வேண்டும்.

"வாற எல்லாத்தையும் இப்படி விருப்பமில்லை விருப்பமில்லை எண்டால்....."

அப்பா கையை உதறிக் கொண்டு எழும்பினார். அவர் குரலில் ஆத்திரம் பீறிட்டது. மூச்சிரைக்கச் செம்பையும் தண்ணியையும் தூக்கிக் கொண்டு கைகழுவப் போனார்.

"குஞ்சு, என்ரை ராசாத்தியெல்லே, அவைக்கு உன்னை நல்லாப் பிடிச்சுப்போச்சு. சீதன பாதனம் ஒண்டும் கூட அவையள் கேக்கேல்ல. ஓமெண்டு சொல்லன்"

அம்மா காலில் விழாக்குறையாக மன்றாடினாள்.

ஏதேதோவெல்லாம் சொல்ல நினைத்தாள் சாருமதி. ஆனால் பேசவிடாது மனம் தடுக்க, கைகழுவிக்கொண்டாள்.

அப்பா கைகழுவிவிட்டு உள்ளே வராமல் விறாந்தையில் அமர்ந்திருந்தார். அவர் அமர்ந்திருந்த தோரணையே அவர் நிலையை வெளியுணர்த்தியது. அவள் அப்பாவைக் கடக்க முயன்றபோது,

"நீ வடிவா யோசிச்சுத்தான் இதை வேண்டாமென்றியோ?"

அவரின் குரலில் ஏதோவொரு தீர்க்கம் தொனித்தது.

"ஓம்"

இந்த பதிலை அப்பாவின் மனது நோகக்கூடாது என்கின்ற பவ்யத்தோடு சொன்னாள். அதிலும் உறுதி தெரிந்தது. சைக்கிளைப் படலையடிக்கு மெதுவாக உருட்டினாள்.

"ஊர்ச்சனம் சொல்லச் சொல்ல நான் நம்பேல்லை. இப்ப பார்க்கப்போனால் சனம் சொல்லுறதுகள் உண்மையோ எண்டு நினைக்கச் சொல்லுது."

அம்மாவை ஏறிட்டுப் பார்த்தாள் சாருமதி. அம்மாவின் முகத்தில் சந்தேகக் கோடுகள் இல்லை. ஆனாலும் ஆதங்கத்தில், ஆற்றாமையில் இந்த வார்த்தைகள் பிறந்துவிட்டன. அம்மா சந்தேகப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பட்டாலும் கூட அவளால் தீக்குளிக்கவா முடியும்?

"ஆண் . மூச்சுப்பிடிச்சவள்"

அம்மாவும் சொல்கிறாள். சொல்லட்டும். இதற்குப்பயந்து என்ன வரப்போகிறது?

மாலை வீடு வந்தபோது வீடு கலகலப்பாக இருக்கிறது. சிறிமதி, அவளுடைய ஒரே தங்கை. முகத்தில் நாணம் படர நின்றாள். அவர்கள் கலகலப்பாகக் கதைத்துச் சிரித்தபடி நின்றார்கள். அவளுக்கும் ஏதோ புரிகிறது. வியாபாரத்திற்குத் தன் தங்கை இரையாகிவிட்டாள் என்பது கசக்கிறது. மனதுக்குள் துயரம் திரள்கிறது. பார்வை அம்மாவைத் தேடுகிறது.

விறாந்தையோரம் தூணோடு சாய்ந்தபடி வந்திருந்த பெண் ஒருவரோடு அம்மா அடக்கமாகப் பேசிக் கொண்டிருக்கிறாள். மாப்பிள்ளை வீட்டாரின் மனதில் மதிப்புப் பெறவேண்டும் என்று எண்ணியோ என்னவோ, அம்மா பளபளப்பான சேலையொன்று கட்டியிருக்கிறாள். சாருமதியின் பார்வையைச் சந்திக்க முடியாது அம்மாவின் மனம் தயங்குகிறது. அவர்கள் விடைபெறும்போது சாருமதியையும் ஒருமாதிரிப் பார்த்துவிட்டுப் போகிறார்கள்.

www.tamilarangam.net

அம்மா குற்ற உணர்வோடு அவசரமாக அந்தச் சேலையை அவிழ்த்து எறிந்துவிட்டு, தன் வழக்கமான கரிபடிந்த சேலையை உதறி உடுத்துக் கொள்கிறாள். அப்பா சாருமதியை தோற்கடித்து விட்ட பெருமையில் கைகளைக் கட்டிக்கொண்டு இருக்கிறார். வீட்டுச் சூழ்நிலைகள் எதிலும் தோய்ந்து போகாமல் சாருமதி தன் அலுவல்களில் மூழ்கினாள்.

அம்மா இன்னமும் தூங்கவில்லை எந்பதற்குச் சாட்சியாக விறாந்தை விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. அம்மாவை நினைக்க அவளுக்குப் பாவமாக இருந்தது. அறியாமையின் மொத்த வடிவமாக அம்மா. அம்மாவுக்குப் பக்கத்தில் போய் அமர்ந்தாள் சாருமதி.

"அம்மா"

அம்மா திரும்பினாள். அவளை ஆச்சரியத்தோடு பார்த்தாள். கண்களில் நீர் திரண்டது.

"என்னம்மா...."

''சிறிமதி லண்டனுக்குப் போகப்போகிறாள். என்ன செய்கிறது? உன்ரவிதி இப்படி எழுதிக் கிடக்கு. நல்லநேரம் வந்தா... உனக்கும்"

மேலே பேசமுடியாமல் அம்மாவின் குரல் இறங்கியது.

"அவையள் சீதனம் ஒன்றும் கேட்கேல்லை. பொம்பிளையை மட்டும் அனுப்பிவிட்டால் போதும் எண்டவை. நல்லசனம்"

சிறிமதியை அனுப்புவதென்றால் சும்மவே? நான்கு லட்சமோ, ஐந்து லட்சமோ? இது மிகவும் லாவகமான சுரண்டல். இதை இந்தத் தாயுள்ளம் புரிந்துகொள்ளவில்லையா?

"உன்ரை கழுத்திலும் ஒரு தாலி ஏறவேணும். அப்பதான்.... அப்பதான் நான் நிம்மதிப்படுவன்."

அம்மா திடீரென்று சிறுகுழந்தையைப் போலத் தேம்பித் தேம்பித் அழுதாள். இது அம்மாவின் பிழையல்ல. அம்மாவை வளர்த்த, அம்மா வளர்ந்த சூழ்நிலையின் குரூரம்தான் என்பது அவளுக்கு விளங்கியது. விறாந்தையில விளக்கைச் சுற்றி விட்டில்கள் செட்டைகள் உதிர விழுந்து துடித்தபடி கிடந்தன.

"அம்மா பாவம்"

சாருமதியின் வாய் முணுமுணுத்துக் கொள்கிறது. □□□



இன்றைய யுத்தத்தின் தீச்சுவாலைகள் எல்லோரையும் தீண்டிவருகிறது. ஆண், பெண் என்ற வேறுபாடின்றி, சாதி வர்க்க வேறுபாடின்றி, சிறியோர், முதியோர் என்ற வேறுபாடின்றி எல்லோரையும் தீண்டிவருகிறது. இது எமது இனத்திற்கு எதிராக எமது இனத்தை அழிக்கும் நோக்கத்துடன் நடாத்தப்படும் யுத்தம். இந்த யுத்தத்தை நாம் அசட்டை செய்ய முடியாது. இந்த யுத்தத்திலிருந்து நாம் ஒதுங்கிக் கொள்ளவும் முடியாது. இந்த யுத்தத்தை துணிவுடன் எதிர் கொள்வதைத் தவிர எமக்கு வேறு வழி இல்லை.

தலைவர் வே. பிரபாகரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கைப்பிடி மண்ணில், ஓர் உலகு.



மண் விளையாடிக் கொண்டிருந்த எனது மகன்
ஓடி வந்தென் கையைப் பிடித்து விரித்து
மண்ணில் ஒரு பிடி அள்ளி வைத்து
ஓர் புன்னகையின் பூவெறிந்து போனான்.

ஈரங் குழைந்த மண் சில்லிடச் சிலிர்த்த கை
இன்னும் விரிந்தபடியே இருக்க
மலர்ந்திருந்த கைப்பிடி மண்ணில்
ஓர் உலகே விரிந்தது.
செட்டை கட்டிப் பறந்த வென்
சிறுவம் அதில் நடந்தது.

குட்டி ராஜாங்கம் எம் முன்றலிலே
நான் கொடி கட்டி
குரலோச்சி அரசாண்ட பீடும் பெருமையும்,
என் முந்தையோரின்
கூடியிருப்பும் குதூகலிப்பும்,
நல்லிரத்தம் சுவறிய நாகரிகத்து வாழ்வும்
கால் கொண்டு நடந்தன கைப்பிடி மண்ணிலே

இன்றோ எம் கண் முன்னே
எல்லாம் சிதற இருந்த நிலம் குழிபெயர
அந்தரத்தில் தொங்கும் அவலங்கள் எமதாக
தொண்டைக் குழியின் தொடுமுடிச்சிற் போய்

இறுகி நிற்கும் வாழ்வும் ஒரு கேடா?
கண நினைவின் நெகிழ்விலே
கையிலிருந்த பிடிமண் வழுவி விழும்.

'கைதவறிப் போமா எல்லாம்?'
கவலையுறும் என் பார்வை
மண் விளையாடும் எனது மகன் மீது கனிகையிலே
என் விழிகள் மீண்டும் சிலிர்க்கும்.


புதிது தளிரீன்ற மாவின் கீழ்
காதலோடு மண்ணைக் குழைத்து
கலை செய்த வாழ்விற்கோர்
கோயில் எடுத்துக் கும்பிடுகள் போட்டு
குனிந்து ஓர் பிடி மண்ணள்ளி
நெற்றியிலே நீறாய்ப் பூசி நிமிர்ந்த வென்
நேசமகன்
தேவாரத்திற் சில பதங்கள் தெளித்தான்
ஈரங் குழைய நின்றேன் நான்
காலம் அவனுடைக் கைபார்த்து நிற்பதென.

சு. வில்வரட்ணம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

**விடுதலைப் புலிகளின் கொக்கிளாய் இராணுவ முகாம் தாக்குதலை உயிரோட்டத்துடன் சித்தரிக்கும் "விடிவிற்கு முந்திய மரணங்கள்" எனும் நாவலிற்கு கிட்டண்ணா எழுதிய முன்னுரையை இங்கு தருகிறோம்.**

www.tamilarangam.net



# உங்களுடன்....

தம் உயிர் ஈந்து இம் மண்ணிலே விடுதலைப் பயிரை உரம்பெறச்செய்து விட்ட தியாகிகளை நாம் என்றும் மறக்கமுடியாது. மறந்தால் நாம் மனிதம் அற்றவர்களாகின்றோம்.

எம் தோழர்கள்... நாம் எப்போதும் ஒரே குடும்பமாக வாழ்பவர்கள். இனிய உறவுகளைத் துறந்த நாம், எம்மை நேசித்து நம்மோடு நாமே ஐக்கியமாகி, இறுகப் பிணைந்துவிட்ட ஜீவன்கள். நமக்கு நாமே தாயாகி, தந்தையாகி, இனிய உறவாகி, இணைந்திருக்கின்றோம்.

எமக்கிடையே ஏற்படும் இழப்புகள்.. எமக்கு மிக நெருக்கமானவர்கள் நிரந்தரமாகவே பிரிந்துவிடும்போது, எம்மோடு ஒன்றான, எம்மிலே ஒன்றான, அவர்களின் பிரிவுகள் எம்மை நிலைகுலையச் செய்கின்றன. உதிர்வை நினைத்து நாம் அழவில்லைத்தான், அழமுடியாதுதான். ஆனால் நாம் அடையும் வேதனை சொல்லமுடியாதது. சொன்னாலும் யாராலும் புரிந்து கொள்ள முடியாதது.

புரட்சிக்காரர்கள் என்றால் கடினமானவர்கள் என்று எண்ணும் இந்த உலகம், மனிதர்களுள்ளே மிகவும் மென்மையானவன், மிருதுவான உணர்வுகளைக் கொண்டவன். அதனால்தான் புரட்சிக்கே புறப்பட்டவன் என்பதை உணரவில்லை. அந்த மென்மையான இனிய உள்ளங்களோடு நாம் உறவாட, வாழ இன்னுமொரு பிறவி கிடைக்காதா என்று ஏங்குகின்ற ஏக்கங்கள் யாருக்கும் புரியாமலிருக்கலாம். ஆனால் எம்மைச் சார்ந்தவர்கள் நிச்சயம் புரிந்து கொள்ளமுடியும்.

அந்த தியாகிகள் கடந்து வந்த பாதை கடினமானதுதான். அந்தக் கடினங்களை எம்மோடு இறுதிவரை பகிர்ந்து வந்த எம் இனியவர்கள் இடையிலே உதிர்ந்துவிடும் போது, எம் தாயை இழந்த துயர், எம் தந்தையை இழந்த துயர், எம் இனிய உறவுகளை இழந்த துயர், இவைகளையும் கடந்து துயர் உண்டு என்றால் அவற்றையும் கடந்து துயரடையும் எம்நிலை யாருக்கும் புரியாது.

ஒருவனைப் பிரியும் போதே இந்நிலை எழும்போது, பதினாறு உயிர்களையும் ஒரே தாக்குதலில் பறிகொடுத்த எம் நிலையை எந்த வெற்றியும் எந்தச் சந்தோசமும் சீரமைத்துவிட முடியாது.

தம் இனிய கனவுகளை இம் மண்ணிலே புதைத்துவிட்டு இந்த மண்ணில் விடுதலைக்காகப் புறப்பட்ட அந்தப் பதினாறு ஆருயிர்களை இந்த மண் மறந்துவிடக்கூடாது. அவர்களின் ஆத்மாவின் கீதங்கள் இன்னும் எம் உள்ளங்களில் ஒலித்துக் கொண்டிருப்பதை இம் மண்ணின் மைந்தர்களோடு பகிர்ந்துகொள்கிறோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கலைகளில் மறைந்துள்ள உண்மைகள்



"கலையும் விஞ்ஞானமும் சமூக உழைப்பிலிருந்து தோன்றியவை. இரண்டும் ஒன்றுக்கொன்று ஆதாரமாக உள்ள இருவகைப் பட்ட வடிவங்கள். இவையிரண்டும் மானிட உழைப்பிலே வேர் கொண்டுள்ளன." என மார்க்சிய அறிஞர் ஜோர்ஜ் தோம்சன் கூறுகிறார்.

இத்துணை முக்கியத்துவம் பெற்ற கலைகள் பற்றிப் பேசுமிடத்து, கலைஞன், கலைஞர் என்ற பெயர்ப்பதங்கள் பாவிக்கப்படுவது போல, கலைஞி, கலைஞை என்ற சொற்கள் வழக்கில் சொல்லப்படுவதில்லை. அப்படியானால் கலைகள் தோற்றம் பெற்ற காலத்திலிருந்து இன்றளவும் கலைத்துறைகளில் பெண்களின் ஈடுபாடு இல்லாமலிருந்ததா? குறைவாக இருந்ததா? என்றெல்லாம் பல கேள்விகள் மனதில் எழுகின்றன.

கலை என்று தோற்றம் பெற்றதோ, அன்றிலிருந்து பெண்களின் பங்கும் இருந்திருக்கிறது என்பதை ஆங்காங்கே கிடைக்கும் சில வரலாற்றாதாரங்கள், தொல்பொருள் ஆய்வாளரின் கண்டுபிடிப்புகள் சில காட்டி நிற்கின்றன.

ஆதிச்சமுதாய வாழ்வில், ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி வேலைகளில் ஈடுபட வேண்டும். வேட்டையாடுதல், காய்கறி பறித்தல் போன்ற வேலைகளில் இருவரும் ஈடுபடுவர். நிரந்தரமாக ஓரிடத்தில் வாழாமல் அலைந்து திரிவர். வேட்டையாடிப் பெற்ற மாமிசத்தை அன்றே பச்சையாகச் சாப்பிட்டுவிடுவார்கள். வேட்டைக்குச் சென்று கொன்ற மிருகத்தைக் கொண்டு வந்து சாப்பிடும் போது ஆடிப்பாடிக் களித்திருப்பர். இந்த ஆடல், பாடல்களில் ஆண்களும், பெண்களும் பங்குபற்றுவர்.

உற்பத்திக் கருவிகள், கலைவடிவங்கள் இரண்டும் மனிதனின் புற, அக உணர்வுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு, அவனின் ஆக்க சக்திக்கும் உந்துகோலாக அமைவன. உற்பத்திக் கருவிகளின் வளர்ச்சி, கலை வடிவங்களில் மாற்றங்களை ஏற்படுத்தி வந்ததை, வருவதை வரலாறு தெரிவிக்கின்றது.

மக்களின் தொகை அதிகரிக்க அதிகரிக்க, அவர்களின் உணவுத் தேவைகளும் அதிகரித்தன. இந்தத் தேவை மக்களைப் புதிய வழிமுறைகளைக் காணத் தூண்டியது. விவசாயமும், மீன்பிடித் தொழிலும் அறிமுகமாகியது. இதனால்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அலைந்து திரிந்த நாடோடி வாழ்க்கை முறை மாறி, மக்கள் நிலையாக வாழத் தலைப்பட்டனர்.

இசை, கூத்து, சிற்பம், ஓவியம் எனப் பல கலைகளும் அங்கு வளர ஆரம்பித்தன. அந்தச் சமூகத்தில் கலையை நுகர்பவர்களுக்கும், கலைஞருக்குமிடையே பெரிய இடைவெளிகள் எதுவும் இருக்கவில்லை. ஆண்களினதும், பெண்களினதும் கலை வெளிப்பாடுகள் பிரித்துப் பார்க்கப்படவில்லை.

மேலதிகமாக உற்பத்தி செய்யக் கூடிய விதத்தில் உற்பத்திக் கருவிகள் அதிகரிக்கக் கூட்டாக வாழ்ந்த மனிதசமூகம், வர்க்கங்களாகப் பிளவுபடத் தொடங்கியது. முன்னேறிய உற்பத்திக் கருவிகளை, உற்பத்திச் சாதனங்களை வைத்திருந்தவர்கள், வாய்ப்பற்ற ஏனையோரை அடிமைகளாக்கித் தமக்காக உழைக்கச் செய்தனர். உற்பத்திச் சாதனங்களை ஆள்பவனே, கலைகளையும் கட்டுப்படுத்தினான். கூட்டுச்சமூக அமைப்புச் சிதைந்தது. கூட்டுக்கலை குலைக்கப்பட்டது.

கலைஞருக்கும், நுகர்வோருக்குமிடையே பெரிய இடைவெளி ஏற்பட்டது. மக்கள் தம் அக உணர்வை வெளிப்படுத்த கலைகளைப் படைக்க முடியவில்லை. குறிப்பிட்ட சிலருக்காக, அதாவது நிலப்பிரபுக்களுக்காக கலைகள் படைக்கப்பட்டன.

சங்க இலக்கியங்களில் பாணன் என்ற ஆண் கலைஞன் மட்டுமல்லாமல், பாடினி, விறலி என்ற பெண் கலைஞிகளும் குறிப்பிடப் படுகின்றார்கள். அந்தப் பெண் கலைஞிகள் சுதந்திரமானவர்கள். எவருக்கும் அடிமைகளல்லர். புகழப்படவேண்டியனவாக இருந்தால் மட்டுமே எந்த நிலப் பிரபுவையும் பாடுவார்கள்.

ஆனால், தொடர்ந்து வந்த சமூக அமைப்பில் இந்த நிலை முற்றாக மாறுகின்றது. சிலப்பதிகாரத்து மாதவி அதனை அப்படியே பிரதிபலிக்கிறாள். கணிதத்தின் சிறப்பினையும், எழுத்துக்களின் சிறப்பினையும், அவற்றாலாய இயற்றமிழின் ஐந்து கூறுபாட்டையும், இசைத்தமிழுக்கியன்ற நால்வகைப் பண்புகளின் பெருமையினையும், அப்பண்புகளோடு கூடிய பதினொருவகைக் கூத்துக்களையும், ஆடும் திறன்மிக்க மாதவி, கோவலன் என்னும் நிலப்பிரபுவின் பாலுறவுத் தேவைகளைப் பூர்த்தி செய்பவளாகவே வாழ்ந்தாள். கானல் வரியில் யாழிசைத்துச் சுதந்திரமாகப் பாடமுற்பட்டதனால்தான் கோவலன் அவளைப் பிரிந்தான். இதிலிருந்தே பெண் கலைஞியின் நிலைப்பாடு புரிகிறது. கலைஞர்கள் எப்படி நிலப்பிரபுத்துவச் சமுதாய அமைப்பிற் சிக்குண்டு திணறினார்கள் என்பது மட்டுமல்ல, பெண்கலைஞிகள் எப்படிச் சீரழிக்கப்பட்டார்கள் என்பதும் புலனாகின்றது.

சிலப்பதிகாரத்தில் நிலப்பிரபுவுக்கு அடிமையாகப் பெண்கலைஞிகள் இருக்கின்ற அதேவேளை, வேறு ஓர் மாறுபட்ட சமூகத்தையும் காணக்கூடியதாக இருக்கிறது. ஆய்ச்சியர்குரவை, குன்றக்குரவை, வேட்டுவவரி எனபவற்றின் ஊடாகப் பெண்களின் இசை, கூத்து போன்ற கலை வெளிப்பாடுகளைப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. தீங்கு ஏதும் நிகழாமல் இருப்பதற்காக குல தெய்வமாகிய மாயோனை வாழ்த்திப் பெண்கள் குரவைக் கூத்தாடுகின்ற செய்தி ஆய்ச்சியர் குரவையில் வருகின்றது. கண்ணகியைத் தங்கள் குல தெய்வமாகக் கொண்டு பெண்கள் குரவைக் கூத்தாடுவது குன்றக்குரவையில் வருகின்றது. இவைகளெல்லாம் பெண்கள் பெண்கள் தங்கள் கலை உணர்ச்சிகளை, மகிழ்ச்சியைச் சுதந்திரமாக வெளிப்படுத்தியதைக் காட்டுகிறது. பழங்குடித் தன்மைமிக்க சமூகத்தில் மட்டும் தான் இந்த நிலை. ஆனால், நிலப்பிரபுத்துவச் சமுதாய அமைப்புக்குள் கட்டுப்பட்டு வாழ்ந்த பெண்களுக்கு இந்தச் சுதந்திரம் இருக்கவில்லை.

நிலப்பிரபுக்கள், தம்மை எதிர்த்து தமது அடிமைகள் நடந்துவிடக்கூடாது என்பதற்காகக் கடவுட் கோட்பாட்டை உருவாக்கி நிலைபெறச் செய்தார்கள். முற்பிறவியில் செய்த பாவத்தினால் தான் அடிமையாகக் கஸ்ரப்படுகிறார்கள் என்றும், அல்லாவிடில் தெய்வம் தண்டிக்கும் என்றும் பல மூடக் கொள்கைகளைத் தமது அடிமைகளின் மனதுள் புகுத்தினார்கள். மக்களுக்காகக் கோயில் கட்டுவதாகக் கூறிக்கொண்டு, தமது வர்க்க நலனைக் காத்துக் கொள்ளக் கோயில்களைக் கட்டினார்கள். கோயில்களை மையமாக வைத்துக் கலைகள் வளர்க்கப்பட்டன. கலைஞர்கள் கட்டுப்படுத்தப்

---

எந்த ஒரு அரசியல் புரட்சியையும் தொடர்ந்து ஒரு நாடு முன்னேற வேண்டுமானால் கல்லாமையும், இல்லாமையும் இல்லாமல் போக வேண்டுமானால் அந்த நாட்டிற்கு முக்கியமான தேவை, முதற்பெருந் தேவை பண்பாட்டுப் புரட்சியே. பண்பாட்டுப் புரட்சியின் காவலராக நம்மை ஆக்கிக் கொண்டு நம் பண்பாட்டின் நல்ல அம்சங்களைக் கிரகித்துக்கொண்டு, தன்மயமாக்கிக்கொண்டு, இதிலுள்ள மூடக்கட்டுக்களைத் தகர்த்தெறிந்து புத்தம் புதிய சமுதாயத்தைப் படைக்க வேண்டும்.

("பெண்கள் படைப்பில் பெண்கள்" என்ற நூலிலிருந்து.)

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்டனர். தேவதாசி என்ற ஒரு சாதியினர் உருவாகினர். கோயில்களில் நடனமாடும் பெண்கள் அங்கே நடனமாடுவதற்கு என, கோயில்களோடு பொட்டுக் கட்டிவைத்தனர். பொட்டுக் கட்டி வைக்கப்பட்ட பெண்கள் நிலப்பிரபுக்களுக்கும் ஆசைநாயகிகளாக வாழவேண்டிய அடிமை நிலையில் இருந்தார்கள்.

கலைத்திறன் மிக்க பெண்கள் தேவரடியார் என்ற நிலையிலிருந்து தேவதாசியாக மாறி, தாசிக் குலம் ஆக்கப்பட்டு, பெண்கள், ஆண்களுக்கு இன்பமூட்டும் கருவிகளாகக் கருதப்பட்ட ஓர் சமூகத்தில் குலமகள், விலைமகள் என்ற இரட்டைத் தன்மை உருவானது.

இவ்வாறாகச் சமுதாய மாற்றங்களூடாகப் பெண் கலைஞிகளின் செயற்பாடுகள் மறைக்கப்பட்டமையும், அவர்கள் பெண்கள் என்ற காரணத்தால் கலைத்துவங்கள் குறுகிய வட்டத்துள் ஒடுக்கப்பட்டமையும் நிகழ்ந்தன.

கலைகள் தோற்றம் பெற்று வளரத் தொடங்கியதிலிருந்து இன்றுவரை இசை, நடனம், நாடகம், இலக்கியம் என்ற எந்தத் துறைகளை எடுத்துக் கொண்டாலும், அந்தத் துறைகளில் பெண்கள் பங்குபற்றியமை பெரும்பாலும் வெலிப்படுத்தப்படவில்லை. இக்கலைத்துறைகளில் பெண்கள் ஈடுபடாதிருக்கலாம் என்று எக்காரணம் காட்டியும் அடித்துச் சொல்லிவிட முடியாது. அப்படியானால் பெண்களின் திறமைகள் மறைக்கப்பட்டுள்ளனவா? என்ற கேள்வி இயல்பாக எழுகின்றது. எப்படிப்பட்ட கலை ஆற்றல்கள், ஏன் அவை மறைக்கப்பட்டன? என்ற கேள்விக்கான விடைகள் ஆராய்ந்து கண்டுபிடிக்கப்பட வேண்டியன. கலைத்துறையின் முழுமையை, கலை வளர்ந்த ஆற்றலின் உண்மையை வெளிப்படுத்த இந்த ஆய்வுகளே உதவும்.

இயல், இசை, நடனம், நாடகம் என்ற பல்வேறு கலைத்துறைகள் சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பாகப் பல ஆராய்ச்சிகள் வெளியாகியுள்ளன. ஆனால், அவற்றில் பெண்களின் கலைத்திறமைகள் பெரிதும் வெளிப்படுத்தப்படவில்லையென்றால் அதற்குக் காரணம் பெண்கள் பங்கு பெறவில்லை என்பதல்ல. ஆராய்ச்சியில் ஆண் முதன்மை நோக்கு இதனை மறைத்திருக்கக் கூடும்.

இலங்கையில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நாவலர் போன்றோரின் சமயத் தூய்மை வாதம் நடனத்தை நிராகரித்தது. சதிர்க்கச்சேரியை சின்னமேளம் என இழிவாகக் கூறியது. பெண்கள் நடன நிகழ்ச்சியில் ஈடுபட்டால் அவர்கள் இழிவானவர்களாகக் கருதப்பட்டார்கள். பெண்களின் கலைத்திறமைகள் வெளிப்படுத்தப்பட வாய்ப்புகள் இல்லாமல் போனது.

பொதுவாகப் பெண்களின் கலை உணர்வு தையல், பாய் இழைத்தல், கோலம் போடல், பின்னல் வேலை எனக் கட்டுப்படுத்தப்பட்டது.

இசை, நடனம், நாடகம் என்ற எத்துறைகளை எடுத்தாலும், அக்கலைத்துறைகளின் ஊடாக எத்துணை வலிமையான கருத்தையும் இயல்பாக விளங்க வைக்கலாம். இந்தக் கலைத்துறைகளில் ஈடுபட ஆர்வமுள்ள எவரும் இதனுள் மூழ்கித் திளைத்து, முத்தெடுக்க உரிமையுடையவர்கள். ஆண்களுக்கு மட்டும்தான் இவற்றில் ஈடுபட உரிமை உண்டு என்று சொல்லிவிடமுடியாது. இது மனித உரிமை. இந்த உரிமையைப் பறிக்க நினைக்கும் எவருக்கெதிராகவும் போராடலாம். தடைக் கற்களாகவிருக்கும் பிற்போக்குத்தனமான கருத்துக்கள் எதிர்க்கப்பட வேண்டும். பெண்களுக்குள்ள உரிமைகளுக்காகப் போராட, இந்தக் கருத்துக்களை முன்வைக்க சகல ஆண்களும், பெண்களும் முன்வர வேண்டியது மட்டுமல்லாமல் செயற்படவும் வேண்டும். முற்போக்குத்தனமான செயற்பாடுகள் மூலம், பிற்போக்குத்தனமான கொள்கைகளை உடைத்தெறிய வேண்டும்.

சகல கலைகளிலும் ஈடுபடுவதால் பெண்கள் தாம் மட்டும் வளரவில்லை, இந்தச் சமூகத்தையும் வளர்க்கின்றார்கள் என்பதைப் புரியவைக்கவேண்டும். விழிப்புணர்வை ஏற்படுத்தச் சரியானதோர் ஊடகமாகவிருக்கும் இந்தக் கலைத்துறை சார்ந்த விடயங்களில் பெண்களுக்கு ஈடுபட உரிமை உண்டு என்பது மட்டுமல்ல, இடைக்காலத்தில்தான் இந்த உரிமை பறிக்கப்பட்டது என்பதையும் சகலரும் புரிவதோடு, பெண்களின் கலைத்துவங்கள் ஏன் மறைக்கப்பட்டன என்பதை ஆராய முன்வர வேண்டும்.

(1991ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட முத்தமிழ் விழா மலரில் பிரசுரிக்கப்பட்டது.) ■■■



நம்பிக்கை ஒளியை ஏற்றி வைப்பது சுலபம். ஆனால் அதனை அணையவிடாமல் பாதுகாப்பது கஷ்டம். ஆனால் அப்படி பாதுகாப்பதில்தான் எந்த ஒருவரினதும் வெற்றியும், வீரமும் தங்கியுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




# விடுதலைப் போரில் தமிழ்ப் பெண்கள்

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இன்று ஆயிரக்கணக்கில் இளம்பெண்கள் ஆயுதமேந்திப் போராட்டக்களத்தில் குதித்திருக்கிறார்கள். சமுதாயத்தின் பழமைவாத, பெண் அடிமைத்தன விலங்குகளை உடைத்தெறிந்து, தாய்மண்ணை மீட்டெடுக்க களத்தில் குதித்திருக்கும் இந்தப் பெண்புலிகளின் வீரமும் தியாகமும் தேசாபிமானப் பற்றும் பெண்ணுலகிற்கே பெருமை தரக்கூடியது. பலம் வாய்ந்த மகளிர் படைப்பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டு, அது தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசிய விடுதலை இராணுவத்தின் ஒரு அங்கமாகச் செயற்படுகின்றது. ஆண் போராளிகளுடன் சரிசமமாக நின்று போர்புரியும் துணிச்சலும், மனவலிமையும், தியாக உணர்வும் தமக்குண்டு என்பதை பெண்புலி வீராங்கனைகள் நிருபித்துக் காட்டியுள்ளனர். கொக்காவில், மாங்குளம் இராணுவ முகாம்கள் தகர்க்கப்பட்ட போது மகளிர் படை அணிகளும் அதில் பங்குபற்றி மகத்தான சாதனைகளைப் புரிந்திருக்கின்றன. யாழ். கோட்டை முற்றுகையிலும் பங்குகொண்டு, பயங்கரமான விமானக் குண்டுவீச்சுக்கள் மத்தியிலும் எதிரியுடன் போரிட்டிருக்கிறார்கள். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, ஆ.க.வெ சமர் எனப்பெயரிடப்பட்டு நடாத்தப்பட்ட ஆனையிறவுச் சமரிலும், வெற்றிலைக்கேணி, கட்டைக்காட்டிலிருந்து நகர்ந்த 8000 துருப்புக்களோடும் நின்று சமர் செய்திருக்கிறார்கள். இவ் வரலாற்று முக்கியத்துவம் பெற்ற சண்டைகளில் பெண் போராளிகள் பலர் களத்தில் மடிந்திருக்கிறார்கள். இப்படியாக இளம் பெண்கள் ஆயுதப் போராட்டத்தில் இறங்கி வியத்தகு தியாகங்களைப் புரிந்து வருவது தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் புரட்சிகரமான ஒரு புதிய பரிமாணத்தை பிறப்பித்திருக்கிறது.

www.tamilarangam.net





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# சோதனை அலைகளைத் தாண்டிய துணிவுப் படகு

ஆம்! இன்று இவன் மேஜர் கிண்ணி. 10-07-92 அன்று இயக்கச்சியில் ஏற்பட்ட மோதலில் நெஞ்சில் குண்டை ஏந்தி வீரச்சாவைத் தழுவிக்கொண்டான்.

அவன் எம்மைவிட்டு இவ்வளவு விரைவாகப் போனதற்கு காரணமான அந்த நெஞ்சுக் காயத்தை பார்வையிடும் எண்ணத்தில் அவனருகில் அமர்ந்து இருந்து அவன் போட்டிருந்த ரீ சேட்டை உயர்த்திப் பார்த்த போது நான் அப்படியே உறைந்து போனேன். ஏனென்றால் 3 வருடத்திற்கு முன்னர் அவனுக்கு பல சிரமத்தின் மத்தியில் எந்த நெஞ்சுக்காயத்திற்கு சிகிச்சை செய்து மீள உயிர்ப்புக் கொடுத்தோமோ அதே காயத் தழும்பின் மேல் இம்முறையும் குண்டு பாய்ந்துள்ளது. ஆனால் இம்முறை வந்த குண்டு யமனின் வேகத்தில் வந்தபடியால் எங்கள் பிள்ளையின் இதயத்தினூடாக ஊடுருவிச் சென்றுவிட்டது.

1987 இல் இருந்து எமது மண்ணை இந்திய வல்லரசு ஆக்கிரமித்துக்கொண்டிருந்த காலகட்டத்தில், நான் எனது வைத்திய சேவையை வல்வை அரசினர் வைத்தியசாலையில் செய்துகொண்டு, அதேவேளையில் போராளிகளுக்கு, முக்கியமாக காயமடைந்துவரும் போராளிகளுக்கு சிகிச்சையும் செய்துவந்தேன். இப்படி

www.tamilarangam.net



தொடர்ந்து எனது சேவையைச் செய்துகொண்டிருக்கும் போது இந்திய இராணுவத்தின் கெடுபிடிக்குள், கொலைப் பயமுறுத்தல்கள் போன்றவை தொடர்ந்து எனக்கு இருந்த வண்ணமேயிருந்தன.

இப்படித்தான் 28-05-89 அன்று காலை நான் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் நோயாளர்களைப் பார்வையிட்டுக்கொண்டிருந்த போது, சொனி என்னிடம் வந்து "அக்கா அவசரமாக ஒருத்தரைப் பார்க்க வேணும். சரியான சீரியஸாக இருக்கிறார்" என்றான். வழமையாக நான் சிகிச்சைக்குப் போவது பகல் 12 மணிக்குப் பிறகுதான். அதுவரை காயமடைந்தவர்களுக்கு ஏதோவிதத்தில் தங்களால் ஆனவரை மருத்துவப் போராளிகள் சிகிச்சை செய்துவிடுவார்கள். ஆனால் இன்று சொனி அவசரம் என்கிறான். நேரமோ காலை 9 மணி. என் முன்னால் 200-300 நோயாளர்கள் காத்துக் கொண்டிருக்கின்றார்கள். அதைவிட ஒருபக்கம் பொலிகண்டி இராணுவமுகாம். மறுபக்கம் வல்வெட்டிச் சந்தியில் இராணுவமுகாம். இதற்கிடையே எம்மிடையே எத்தனை எட்டப்பக் கண்கள். இவற்றையெல்லாம் ஒருகணத்தில் மறந்துவிட்டு, சொனியை முன்னுக்கு அனுப்பிவிட்டு நான் ஒருசிறு பையில் அவசர சிகிச்சைக்குத் தேவையானவற்றை எடுத்துக் கொண்டு ஓர் ஆதரவாளரின் சைக்கிளில் குறிப்பிட்ட ஒழுங்கையை அடைந்தேன். அங்கு ஏற்கனவே போயிருந்த சொனி என்னைக் கண்டவுடன் சைக்கிளை விட்டிறங்கி தன் பின்னால் வரச் சொன்னான். அங்கிருந்து நான் அவன் பின்னால் ஓர் குச்சு ஒழுங்கையினுள் சென்ற போது, அங்கு அம்பப்பா, ஜேம்ஸ் இன்னும் சில போராளிகள், சகலரும் ஆயுதம் தரித்த நிலையில். சகலரினது முகங்களிலும் இனம்புரியாத வேதனை. நான் அவர்களுடன் மௌனமாகி இரண்டு மதில்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ளைத் தாண்டி, கடற்கரை ஓரமாக அமைந்துள்ள ஒரு வீட்டின் பின்புறமாகப் புகுந்து வீட்டினுள் சென்று பார்த்த போது அங்கு கிண்ணி படுக்க முடியாத அளவிற்கு நெஞ்சில் முட்டு ஏற்பட்டு, மூச்சு எடுக்க முடியாமல் திணறிக்கொண்டு சுவரில் சாய்ந்தபடி இருந் தான். என்னைக் கண்டவுடன் சிரமப்பட்டு ''அக்கா! என்னாலே ஏலாது. எப்படியா வது மூச்சுவரப் பண்ணுங்க" என்றான். என் நிலையோ மிக வும் தர்மசங்கடமானது. என்னிடமுள்ள மருத்துவ வசதி கள், உபகரணங்கள் போன்ற வற்றை வைத்து அவனின் நிலைக்கு சிகிச்சை செய்ய முடியாது. ஏனென்றால் காயம் இடதுபக்க நெஞ்சில் பட்டு உள்ளுக்குள் ஊடுருவிச் சென்று, நெஞ்சுப் புடைக்குழியி னுள் இரத்தத்தை நிறைய நிரம்ப வைத்துவிட்டது. அத னால் அவன் நிலை ரொம்ப மோசமாகி ஒரு பக்க நெஞ்சில் சுவாசம் முற்றாக ஸ்தம்பித்து விட்டது.

ஆகவே உடனடியாகச் செயல்ப்பட்டு அவனின் மூச்சுத் திணறலைக் குறைப்பதற்குச் சிகிச்சை செய்தேன். சிகிச்சை செய்துகொண்டிருக்கும் போது என் மனதில் பல போராட் டங்கள். அதில் என் மனக்கண் ணில் முதல்த் தோன்றியவர் கிண்ணியின் தாய். "கிண்ணி யம்மா" என்று சகலராலும் அழைக்கப்படுபவர். கிண்ணிக்கு மட்டுமல்ல பல போராளிகளிக்கும் தாயாகத் திகழ்ந்தவர். அத்துடன் ஏற்க னவே ஒரு மகனை "கப்டன் முரளி"யாக 1985 ஆம் ஆண்டு மயிலியதனை மினிமுகாம் தாக்குதலில் அர்ப்பணித்தவர். அதற்கடுத்து, இடம் கொடுத்து உணவூட்டி வளர்த்த சலாமை 1988ஆம் ஆண்டில் இழந்தவர். இந்நிலையில் இவனும் இறந்து

www.tamilarangam.net

# சமாககளத்தில் பெண் வைத்தியர்



இராணுவத்தினரின் இன ஒழிப்பு நடவடிக்கைகளின் மத்தியிலும் போராளி களோடு போராளியாக நின்று வருகிறார் அவர். பெண்கள் ஆயுதப் போராட்டத் தில் இணையுமுன்பே தன்னைப் புலிக ளோடு இணைத்தவர் அவர்தான். மக்க ளால், "அம்மா" என்றும் புலிகளால் 'அக்கா, டொக்டர் அன்ரி' என்றும் அழைக்கப்படும் மருத்துவர் செல்வி சாந்தி, மக்களுக்காக சேவை செய்வதற்காகவே தமிழீழ மண்ணிலே வாழ்ந்து கொண்டி ருக்கிறார்.

1984ம் ஆண்டின் புலிகளுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்ட இவர் இராணுவக் கெடுபிடிகள் காரணமாக போராளிகளும் மக்களும் தகுந்த நேரத்தில் வைத்திய சிகிச்சை பெறமுடியாதிருந்த போது, அதற்கு முதலுதவி பெருமளவில் பலன் அளிக்கும் என்ற எண்ணத்தில் முதலில் எம் மக்களுக்கும் போராளிகளுக்கும் முதலுதவி வகுப்புக்களை எடுத்தார்.

இந்தியப்படை தமிழீழ மண்ணில் கால்பதித்து நின்றபோதும் இலங்கைப் படையுடனான போர்களின் போதும் தொடர்ந்து தனது பணியை சிரமேற் கொண்டு வருகிறார்.

"யுத்தக் களங்களில் காயப்பட்டவர்களை மேலும் காயமடையா வகையில் பாதுகாப்பாக முதலுதவி முனைக்கு கொண்டு வருவதற்கு சிலசமயங்களில் மணித்தியாலங்கள்கூட எடுப்பதுண்டு. முதலுதவிச் சிகிச்சை வழங்கப்பட்ட பின்பு அங்கிருந்து வைத்தியசா லைக்கு கொண்டுவரும் வழியில் வான்தாக்குதல், பீரங்கித்தாக்குதல் போன்ற பல சிரமங்கள் உண்டு. இதனால் காயப்பட்ட போராளிகளைத் துரிதமாக வைத்தியசாலைக்குக் கொண்டுவர தாமதங்கள் ஏற்படுகின்றது. ஆகவே பயிற்றப்பட்ட வைத்தியர்கள் முதலுதவி முனைகளிலேயே நின்று சிகிச்சை செய்தால் போராளிக ளின் உயிரிழப்புக்களை பெருமளவில் குறைக்கலாம் என்ற எண்ணத்தில்தான் என் சேவையை களத்தில் நின்று செய்யவிரும்பி னேன்." என்கிறார். மேலும் "என் கண்முன்னே ஒவ்வொரு போராளியும் தன் உயிரைத் தியாகம் செய்யும் போது நெஞ்சில் ஏதோ இனம்புரியாத ஒரு பாரம், வேதனை நம் குடும்பத்தின் அங்கத்தவர் ஒருவரை இழந்ததுபோல் ஒரு பிரிவு தோன்றும். ஆனால் உடனேயே எந்த இலட்சியத்துக்காக தம் உயிரைத் தியாகம் செய்தார்கள் என்பதை நினைத்தவுடன் என் கண்கள் நீர் விடுவதில்லை. இதற்கு மாறாக என் பணியில் ஒரு புதிய உற்சாகம் பிறக்க, நான் என் கவலைகளை மறந்து தொடர்ந்து என்பணியைச் செய்வேன். காயமுற்ற போராளிகளை காப்பாற்றிய பின்பு ஏற்படும் மன நிறைவு, சந்தோசம், திருப்தி போன்றவற்றை வார்த்தைகளில் சொல்லிவிட முடியாது; அனுபவித்துப்பார்த்தால்தான் புரியும்." என்று ஆன்ம திருப்தியோடு கூறுகின்றார். நிறைந்த நேயத்துடனும், பற்றுடனும் தாயாக தனது உயிரினுமினிய தேசத்துக்காக உழைக்கும் இவர் நாட்டின் விடுதலைக்காக தங்களின் சுகங்களை துறந்தவர்க ளுக்காக தன் சுகத்தைத் துறந்தவர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

விட்டால்? என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. அதற்கு மேலாக ஓர் உன்னத, திறமையான, உறுதியான போராளி இவன். இவனை எப்படி நாம் இழப்பது?

இவனை எப்படியும் காப்பாற்ற வேண்டும் என்ற வேகம் என் மனதில் ஓர் யோசனையைத் தோற்றியது. அதை நான் ஜேம்ஸ், சொனியிடம் தெரிவித்தபோது, அவர்கள் முதலில் மறுத்துவிட்டார்கள். நான் தெரிவித்த யோசனை என்னவெனில், அவனை உடனடியாக மந்திகை வைத்தியசாலைக்கு அனுப்பி, அங்குள்ள சேஜனின் மூலம் அவசர சத்திர சிகிச்சையைச் செய்துவிட்டு, உடனடியாக ஆளை எம்மிடத்திற்கு திருப்பி எடுத்து இரவு இந்தியாவுக்கு அனுப்புவோம் என்பதாகும். ஆனால் அந்த நேரம் மந்திகை வைத்தியசாலையின் எல்லையில் பல காவலரண்கள். அத்துடன் பெரிய ஒரு இராணுவமுகாமும். இந்நிலையில் எப்படி இவனை அங்கு அனுப்புவது? உடனடியாக இந்தியா அனுப்புவம் என்பது ஜேம்ஸ், சொனியின் வாதம். ஆனால் நானோ, இப்ப இப்படியே இந்தியா அனுப்பினால் அவனின் கதை கடலிலே முடிந்துவிடும். நாம் மூளையைப் பயன்படுத்திச் செயல்ப்பட்டால் ஒரு பிரச்சனையும் வராது என்றேன். இரு நிமிட மௌனப் போராட்டம். இறுதியில் என் முடிவே வென்றது. உடனடியாக எமது திட்டத்தைச் செயல்ப்படுத்தினோம். கிண்ணிக்கு ஓர் அப்பாவை நியமித்தோம். அவருக்கப் பெயர் சூட்டினோம். பின்பு கிண்ணிக்குப் பெயர் சூட்டினோம். அப்பாவையும், மகனையும் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து வைத்தோம். இப்போது கிண்ணிக்கு அப்பா தயார். அதன்பின்பு அப்பாக்கும், மகனுக்கும் சேர்த்து எப்படி காயம் உண்டானது என்று கதை சொன்னோம். அதாவது, "தண்ணி போடப் போன இடத்திலை பொம்பிளைப் பிரச்சனையில் கத்தியால குத்திப் போட்டாங்கள். வல்வெட்டித்துறை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனம். அங்க அந்த அம்மா இஞ்சை ஏலாது மந்திகைக்குக் கொண்டு போங்க என்று துண்டு தந்திருக்கிறா" என்பதே நாம்

## மார்ச் 8ன் முக்கியத்துவம்.

அமெரிக்கத் தொழிலாளர்கள் எட்டுமணி நேர வேலை நேரத்துக்காக போராடி வெற்றிபெற்ற நாளை நினைவு கூரவே மேதினம் அறிமுகமானது. அது இன்று உலகத்தின் ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவராலும் கொண்டாடப்படும் ஒன்றாகியுள்ளது. அதேபோலவே, அதே அமெரிக்கப் பெண் தொழிலாளர்கள் 10 மணிநேர வேலைகேட்டும், ஆண்களுக்கு சமமான ஊதியத்தைக் கேட்டும் வேலைநிறுத்தப் போராட்டம் நடத்தினார்கள்; ஆர்ப்பாட்ட அணிவகுப்புகளையும் நடத்தினார்கள். அமெரிக்கப் புடவை ஆலைப் பெண் தொழிலாளர்களே இதில் முன்னணி வகுத்தார்கள். இது நடந்தது 1857ம் ஆண்டு மார்ச் 8ம் திகதியிலாகும்.

அமெரிக்காவிலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் முதலாளித்துவ வர்க்கம் ஆட்சிக்கு வந்தது. தொழிலாளர்களின் போராட்டங்கள், எதிர்பார்ப்புகள் யாவும் அடக்கப்பட்டன. அவர்களது போராட்ட வரலாறுகளும் மறைக்கப்பட்டன.

ஆனால் வரலாற்றின் உண்மைத் தோற்றத்தை யாராலும் மறைக்க முடியாது. உலக சமதர்ம அனைத்துலக பெண்கள் அமைப்பு என்றோர் பெண் விடுதலை அமைப்பு 1907ம் ஆண்டு தோற்றம் பெற்றது. இது இன்று சமதர்ம அனைத்துலக அமைப்பின் (Socialist International) சகோதரத்துவ அமைப்பாக சமதர்ம அனைத்துலக பெண்கள் அமைப்பு என்ற பெயரில் இன்றும் இயங்கிவருகின்றது.

இவ்வமைப்பின் 2வது மகாநாடு 1910ம் ஆண்டு டென்மார்க்கில் கோபன் ஹேகன் நகரில் கூடியது. முதலாளித்துவவாதிகளால் மறைக்கப்பட்ட வரலாற்றை இவர்கள் வெளிக்கொணர்ந்தார்கள். அமெரிக்க பெண் தொழிலாளர்களின் போராட்ட எழுச்சி நாளான மார்ச் 8ஐ அனைத்துலகப் பெண்கள் நாளாக பிரகடனம் செய்தார்கள். ஜேர்மனிய பொதுவுடமைக்கட்சியின் தலைவர்களில் ஒருவரான கிளாரா செட்கினே இத் தீர்மானத்தை முன்வைத்தவராகும்.

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சோடித்த கதையாகும். பின்பு துண்டில் கிண்ணி கத்தியால் குத்தப்பட்டதாக எழுதி, அவனின் அப்பாவாக இருக்கும் பெரியவரிடம் கொடுத்து காரில் கிண்ணியை ஏற்றி இராணுவ சென்றிக்கூடாகவே மந்திகை வைத்திய சாலைக்கு எதுவித சந்தேகமும் ஏற்படாதவாறு அனுப்பிவிட்டோம்.

பி.ப. 1 மணியளவில் அவனுக்கு வெற்றியாகச் சத்திர சிகிச்சை நடைபெற்று நெஞ்சுக்குழியில் இருந்து கணிசமான அளவு இரத்தம் எடுக்கப்பட்டுவிட்டது. முட்டும் ஓரளவு குறைந்துள்ளது என்பதை ஓர் ஆதரவாளர் மூலம் அறிந்து கொண்டோம்.

பி.ப. 4 மணியளவில் EPRLF இனரால் வைத்தியசாலை தேடுதல் வேட்டைக்குள்ளானது. அவர்களுக்கு கிண்ணியின்மேல் ஒரு சிறு சந்தேகம். ஆனால் உறுதிப்படுத்தமுடியவில்லை. ஏனென்றால் கிண்ணி காயப்பட்டது கள்ளுக்கொட்டில் சண்டை கத்திக்குத்தெல்லவா! என்றாலும் EPRLF இல் ஒருவனுக்கு கிண்ணியின் மேல் சந்தேகம் கொஞ்சம் கூடுதலாக ஏற்பட்டுவிட்டது. அடிக்கடி வந்து கிண்ணியின் பெயரையும், இடத்தையும் கேட்கத் தொடங்கி விட்டான். இதனால் கிண்ணிக்கு பயம் பிடித்துவிட்டது. பி.ப. 5 மணியளவில் ஒரு துண்டில் தனது இக்கட்டான நிலையை எழுதி, உடனடியாக தன்னை வந்து ஏற்றிச் செல்லுமாறு சொனிக்கு அனுப்பியிருந்தான். உடனடியாக அத்துண்டைச் சொனி என்னிடம் கொண்டுவந்து "அக்கா, பிரச்சனை இறுகீட்டுது. இப்ப கிண்ணியை எப்படி வெளியில் எடுப்பது?" என்றான். கடவுளே! என்நிலையோ கிணறு வெட்ட பூதம் வந்த மாதிரி. உயிரைக்காப்பாற்றும் ஒரே நோக்குடன் நான் அனுப்ப இப்ப பிள்ளையின் உயிருக்கே ஆபத்து. ஏன் அவன் உயிருடனே பிடிபடலாம் என்ற பீதி. வேறு என்ன செய்வது? ஒன்றுமே புரியவில்லை. ஒன்றையும் யோசிக்காமல் அம்புலன்சை எடுத்துக் கொண்டு நான் போக முற்பட்ட போது, எமது ஆதரவாளர் ஒருவர், "டொக்ரர் அவசரப்பட்டு எல்லாத்தையும் குழப்பிடாதையுங்க, நீங்க ஏற்கனவே நோட்டட். நீங்கள் போறது புத்தியல்ல" என்றார். அதன் பின்பு சொனியும், எமது ஆதரவாளர்களுமாகச் சேர்ந்து காருடன் சென்று பல தடவைகள் முயன்றார்கள். ஒன்றுமே பயனளிக்கவில்லை. இறுதியாக இரவு 8 மணிபோல் EPRLF காரர் போய்விட வைத்திய சாலையினுள் எப்படியோ புகுந்து, ஏதோ விதத்தில் கிண்ணியைத் தூக்கிவந்துவிட்டார்கள். இப்போது கிண்ணி மீண்டும் வல்வெட்டித்துறையிலுள்ள ஓர் வீட்டில். நான் உடனே போய் பார்த்தேன். ஓரளவு திருப்தியாக இருந்தது. ஆனால் இந்தியாவுக்கு உடனடியாக வண்டியில் கொண்டுபோவதற்கு அவன் நிலை தாக்குப்பிடிக்குமா



ஓ! காளைகளே!
குருதி குளித்த வீரமண்ணை உழ
உனக்கென்ன தயக்கம்!
உனக்கு நல்லுணவில்லையோ!
பசிக்களையா?
உன் தலைவனுக்கும் களைப்புத்தான் அது
இலங்கை அரசு பட்டினி போட்டகளைப்பு!
இன்னொரு நாடு உனக்கென்ன
உணவு தரப்போகிறது?
இப்போதாவது உணர்ந்தாயா?
அவன் தரும் பிச்சை உனக்கெதற்கு?
ஏர்பிடித்த உன் தலைவனுக்குதவு.
நாளை செழிக்கும் பயிர்!
முன்பொரு முறை உணவு தந்து
உயிர் குடித்த கதை தெரியாதா?
உயிர் குடித்த கதை தெரியாதா?
அந்நிய மண்ணில் அடிபதித்து
ஏங்கும் என்னைவிட சொந்த
மண்ணில் தடம் பதித்து உழைக்கும் நீ
பாக்கியசாலி.
சோர்வு களைந்து புறப்படு!
புதுவேகத்துடன்
நாளை மலரும்
ஈழதேசம்
தன்னிறைவு காணட்டும்.

**சித்ரா மகேந்திரதேவன்**

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

என்பது பெரும் சந்தேகமாக இருந்தது. ஏனென்றால், நெஞ்சில் ரியூப் போட்டவர்கள் படுத்திருக்கும் கட்டிலை கொஞ்சம் அசைத்தாலே அவனுக்கு மூச்சுத்திணறும். இந்நிலையில் இவனை எப்படி இந்தியாவிற்கு? என்னால் நினைக்கவே முடியவில்லை. ஆனால் அனுப்பித்தான் ஆகவேண்டும். ஏனென்றால், வல்வெட்டித்துறை அடிக்கடி தேடுதல் வேட்டைக்குள்ளாகும் ஓர் இடம். நாளைக்கு எந்தப் பகுதியில் சுற்றிவளைப்போ எனக்குத் தெரியாது. ஆகவே அவனை அன்றிரவே இந்தியா கொண்டு போவதற்கு ஆயத்தங்கள் செய்யப்பட்டன. அப்போது நானும் அவனுடன் சேர்ந்து போவதாக முடிவெடுத்தேன். ஏனென்றால், இவ்வளவு ஆபத்துக்களில் இருந்து காப்பாற்றிய இவனை கடலில் சாகவிட முடியாது என்பதே எனது நோக்கம். எனது விருப்பத்தை சொனிக்கும், ஜேம்ஸ்சுக்கும் சொன்னேன். பின்பு எனது தாயாரிடமும் நிலைமையை எடுத்துரைத்து சம்மதத்தைப் பெற்றுவிட்டேன்.

இரவு 7 மணிக்கு சொனி வந்து ஓர் மறைவிடத்துக்கு வரும்படி சொல்லிவிட்டுச் சென்றான். நான் ஒரு ஆதரவாளரின் சைக்கிளில் அங்கு போனபோது ஜேம்ஸ், அருச்சுனா, சொனி வேறும் பல போராளிகள் கடற்கரை நேருக்கு நின்றார்கள். வண்டி கிண்ணியை ஏற்றியபடி தயார் நிலையில் நின்றது. நானும் வண்டியில் ஏறினேன். எமது பயணத்தை இரவு 8 மணியளவில் ஆரம்பித்தோம். ஒரு அரை மணித்தியாலம் கடலில் எமது வண்டி போயிருக்கும். எமது வண்டி சடுதியாக ஓர் வண்டியுடன் மோதுகிற அளவிற்கு கிட்ட போனபோது, அதில் சிங்களக் குரல்கள். ஓ! நாம் நேவி போட்டிற்குக் கிட்ட வந்து நிற்கிறோம். அவன் வெளிச்சமில்லாமல் இருட்டில் கட்டிவிட்டு நிற்கிறான். சிந்திக்க நேரமில்லை. எமது திறமையான ஓட்டிகளின் புத்திசாதுரியத்தினால் எமது வண்டி உடனடியாகத் திருப்பப்பட்டு, அதன் 4 எஞ்சின்களும் முழு வேகத்தில் இரையத் தொடங்கின. வண்டி பறக்கத் தொடங்கியது. நேவி துரத்திக் கொண்டே வந்தான். கிண்ணி வேதனையில் பயங்கரமாக அலறினான். தன்னை கடலில் தூக்கியெறியுங்கள் என்று கத்தினான். இந்நிலையில் ஓட்டியொருவர் "டொக்ரர் அம்மா கிண்ணிக்குமேல் ஏறியிருந்து அமத்திப் பிடியுங்க" என்றார். நான் அப்படியே செய்தேன். ஒரு 5 நிமிடப் போராட்டம். எமது வண்டி அதே வேகத்தில் கரையை வந்து அடைந்தது. பிறகென்ன பயணம் இடைநிறுத்தப்பட்டது.

எமக்கு மீண்டும் போராட்டம். இனி அவனுக்கு சீரியஸ் ஆக்கினால் என்ன செய்வது? கடவுள்மேல் பழியைப் போட்டுவிட்டு, நானும் சொனியும் அருகில் இருந்தோம். இதற்கிடையில் அன்று இரவு அவனுக்கு வயிற்றோட்டம் தொடங்கிவிட்டது. ஆகவே வாயினால் ஒன்றும் அருந்தக் கொடுக்காமல் 'றிப்' தொடங்கி அதில் சேலைன், குளுக்கோஸ் ஏற்றினோம். அடுத்தநாள் நண்பகல் வந்தது. "இப்போது நேவி பருத்தித்துறைக் கடலில் படுத்துக் கிடக்கிறான். பகல் என்றால் பார்த்துப் பார்த்துப் போகலாம்" என்றான் அம்பப்பா. எல்லோரும் அதற்குச் சம்மதித்து, எமது பயணத்திற்கு மீண்டும் ஆயத்தமானோம்.

www.tamilarangam.net

## கிட்டண்ணாவுக்கு ஒரு நாய் இருந்தது

**இந்தியப்படையுடன் சண்டை நடைபெற்றுக்கொண்டிருந்த காலம். கிட்டண்ணா இந்தியாவில் திருவான்மியூரில் இருந்தபோது, அவரது வீட்டிற்கு முன்பாக ஒரு சொறிநாய் நின்றுகொண்டிருந்தது. அந்த நாயைக் கிட்டண்ணா பரிதாபத்தோடு பார்த்தார். வீதியில் அநாதையாக, காயங்களோடும், உடலில் உண்ணிகளோடும், உபாதைப்படும் அந்தச் சொறிநாயை வீட்டுக்கு கொண்டுவந்து, குளிப்பாட்டி மருந்துபோட்டு பராமரித்தார். சிலநாளில் அது நன்கு குணமடைந்து விட்டது. வருபவர்களோ "அந்த சொறிநாயா இது?" என்று அவர்களுக்குள் கேட்டு விழிக்கின்ற வண்ணமாக அது தேறிவிட்டிருந்தது. கிட்டண்ணாவின் அன்பான பராமரிப்பால் அது சுகமாகி ஓடித்திரிந்து, குரைத்து, வாலை ஆட்டி நன்றி தெரிவித்து, வாசலில் காவலுக்கு நின்று என இயங்கிக் கொண்டிருந்தது.**

**திடீரென ஒரு நாள் இந்தியப் பொலிசார் கிட்டண்ணாவைக் கைது செய்து சிறையில் இட்டபோது,**

**ஓடித்திரியாது, குரைக்காது, ஓய்ந்துபோய் உணவும் உண்ணாது பெரும் சோகத்துடன் அந்த ஜீவராசி படுத்துவிட்டது. தனக்குள் அது என்ன நினைத்ததோ தெரியாது. அந்த நாய், அண்ணா போய் சில நாட்கள் சாப்பிடாதிருந்து பின்னர் இறந்து விட்டது.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால் பகல் போவது என்றால் எனக்கு ஒரு சிக்கல். அந்த ஊரில் என்னை எல்லோருக்கும் தெரியும். அதனால் நான் இந்தியா போகும் கதை ஏதோ ஒரு விதத்தில் இந்திய இராணுவத்திற்குத் தெரிய வந்தால், நான் திரும்பி வந்து வேலை செய்வது என்பது இயலாத ஒன்றாகிவிடும். ஆகவே எனக்கு உருமறைப்பு செய்து முக்காடு போட்டு ஒருவருக்கும் யாரென்று தெரியாமல் வண்டியில் ஏற்றுவோம் என்று முடிவெடுத்து அதை சொனி, ஜேம்ஸ் இருவரும் செயலில்க் காட்டி, எனக்கு முக்காடு போட்டு முகத்தை மூடி கைப்பிடியில் இழுத்துச் சென்று வண்டியில் ஏற்றிவிட்டார்கள். பி.ப. 3 மணியளவில் எமது பயணம் ஆரம்பித்தது. ஆரம்பத்தில் வண்டி ஒரு எஞ்சினில் மட்டும் போய்க்கொண்டிருந்தது. நடுக்கடலில் வைத்து இரண்டாவது எஞ்சினையும் போட முற்பட்ட போது, கிண்ணியால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. மூச்சு எடுக்கச் சிரமப்பட்டான். ஆகவே, மீண்டும் ஒரு எஞ்சினிலே எமது பயணம் அமைதியாக, ஆறுதலாகப் போய்க்கொண்டிருந்தது. நாம் மிக மெதுவாகப் போனதால், நாம் கடலைக் கடக்கக் கிட்டத்தட்ட 8 மணித்தியாளங்கள் எடுத்தது.

வழமையாக காயக்காரர்களைக் கொண்டு செல்லும் போது, ஆகக்கூடுதலாக 3 மணித்தியாலங்கள் தேவைப்படுகின்றதனால் எம்மவர்கள் பி.ப. 5 மணியில் இருந்தே அக்கரையில் காத்திருக்கிறார்கள். நாம் போய்ச் சேர்ந்த நேரமோ இரவு 11 மணி. நாம் கரையை அண்மித்ததும், வோக்கியில் தொடர்பு எடுத்தோம். "உடனே வண்டியைத் திருப்பிக் கொண்டு நாட்டுக்குப் போங்க" என்று வோக்கியில் பதில் வந்தது. என் இதயம் ஒரு கணம் நின்றுவிட்டது. இவ்வளவு ஆபத்தையும் தாண்டி வந்து, இந்திய எல்லையைக் கண்டவுடன் 'அப்பாடா! இனி கிண்ணி பிழைத்திடுவான்' என்று பெருமூச்சுவிட்டு ஒரு வினாடிகூட ஆகவில்லை. அதற்குள் இப்படி ஒரு பேரிடி. அந்த நிலையை வார்த்தையில் விபரிக்க முடியாது. நான் உடனே "அய்யோ என்னையும் கிண்ணியையும் இறக்கிவிட்டுட்டு நீங்க திரும்பிப் போங்க. நான் எப்படியாவது அவனைக் காப்பாற்றுகிறேன்" திரும்பி பயணம் செய்ய என்னாலும் முடியாது. அவனாலும் முடியாது. இப்பயணத்தில் கிண்ணி மட்டுமல்ல, நானும் களைத்துவிட்டேன். இரண்டு நிமிடத்தின் பின்பு மீண்டும் தொடர்பு கிடைத்தது. உடனடியாக அக்கரைக்கு வரச் சொன்னார்கள். அந்த நேரம் எமக்கு இருந்த சந்தோசத்தை வார்த்தையில் சொல்ல முடியாது. நாம் கரையை அடைந்த போது, அங்கு நின்ற அருணா என் அருகில் வந்து "டொக்ரர் அம்மா ஒரு கதையும் இருக்கக்கூடாது. வாயே திறக்கக்கூடாது. கெதியா வந்து வானில் ஏறுங்க" என்றான். நான் மௌனமாக, விரைவாகச் செயல்ப்பட்டு வானில் ஏறிவிட்டேன். என்னுடன் மூன்று தம்பிகள் ஏறினார்கள். நான் மெதுவாக அவர்களிடம் ''ஏன் இன்னும் கிண்ணியை வண்டியில் இருந்து இறக்கேல்லை. அவனுக்குத்தான் தம்பி சீரியஸ். எனக்கு ஒன்றும் இல்லை" என்றேன். அதற்கு ஒரு தம்பி "நீங்க சும்மா இருங்க. எனக்குத் தெரியும். அவனைக் கொண்டுவர. முதல்லை உங்களைக் கொண்டுபோய்ச் சேர்க்க வேணும். அவனை எப்படியும் கொண்டு வருவோம்" என்று சிரித்தான். நான் மீண்டும் மௌனம். கதைக்கவே இல்லை. என்னை ஏற்றிய வாகனம் போய்க்கொண்டே இருந்தது. என்னுடன் இருந்த தம்பி தொடர்பெடுத்துக் கொண்டே வந்தான். இடையில் சொன்னார், "இனிப்பிரச்சினையில்லை. கிண்ணியை ஏற்றிக்கொண்டு அவங்களும் றோட்டிலை ஏறி விட்டாங்களாம். இனி வந்திடுவாங்கள்." என்று. நாம் எமது பயணத்தைச் சென்னை நோக்கித் தொடர்ந்தோம். ஒரு அரை மணித்தியாலம் கழிந்திருக்கும், கிண்ணியின் வாகனம் எமது இடத்தை வந்து அடைந்தது. நான் உடனே இறங்கி கிண்ணி இருந்த வாகனத்தில் ஏறி, கிண்ணியருகே சென்று அமர்ந்தேன். அப்போது அவன் முகத்தில் தோன்றிய லேசான சிரிப்பைப் பார்த்தவுடன், சந்தோசத்தினால் என் கண்ணில் நீர் நிரம்பியது. அவனுக்கு ஊசியைப் போட்டுவிட்டு, எமது பயணத்தை வெவ்வேறு பாதைகளில் தொடர்ந்து இறுதியாக அடுத்தநாள் பகல் 10 மணியளவில் சென்னை கீழ்ப்பாக்கத்திலுள்ள ஓர் வைத்தியசாலைக்கு ஒன்றாக வந்து சேர்ந்தோம். அங்கு மருத்துவமனையில் அவனை அனுமதித்துவிட்டு, அதற்குப் பொறுப்பான டொக்ரரிடம் போய் கதைத்து அவனின் நிலையை விரிவாகக் கூறிவிட்டு, நான் வல்வெட்டித்துறையை வந்தடைந்தேன்.

**சாந்தி**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




**எரிமலை ஆசிரியர் அவர்கட்கு,**

இத்துடன் நான் அனுப்பியுள்ள பாடல் "என்றும் உழுவான்" தை 93ல் எரிமலையில் காணப்பட்ட படத்திற்கானது.

கடந்த இரண்டு தடவைகளிலும் வந்த படங்களுக்கு பாட்டெழுதியிருந்தவர் ஞானி, ஜேர்மனி. அவருடைய கவிதைகளை மீண்டும் மீண்டும் படித்துப்பார்த்தேன், மெய்சிலிர்க்கிறது. என்னே உணர்ச்சி பூர்வமான சொல்லாட்சி.

**ஜேர்மனி.**

**அன்புள்ள எரிமலை ஆசிரியருக்கு!**

உங்கள் சஞ்சிகை சந்தர்ப்பவசமாகக் கிடைத்தது. தமிழ் இனத்தின் விடுதலைக்கு நீங்கள் செய்யும் பணி போற்றப்பட வேண்டியதே.

**சி. வேலாயுதம்**

**அன்புடன் ஆசிரியருக்கு,**

ஈழத்தில் நடக்கும் செய்திகளை ஏந்திவரும் எரிமலையைப் பார்த்தேன். என் பங்கு ஈழத்திற்கு முக்கியமென உணர்ந்தேன். உதவிகள் பணத்திலுமாக கொடுத்து வருகின்றேன். எரிமலைப் பத்திரிகையை உருவாக்கிய உங்களிற்கு என் முதற் கண்ணாய் நன்றிப் பூரிப்படைகின்றேன்.

**செந்தூர்ச்செல்வன்**
**B.R.D.**

**மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்களே!**

தங்கள் தமிழ்ப்பணி, தாய் நாட்டுப் பற்று ஓங்குக. எரிமலையின் சுவாலை கொடுமைகளைப், பொய்மைகளைச் சுட்டெரித்து உண்மைக்கும், நாட்டுக்கும் ஒளி கொடுப்பது தொடர வாழ்த்துக்கள்.

**எரிமலை ஒளிபட்டவன்**
**தாமரைக்கண்ணன்**

எமது நூல்நிலையம் எரிமலையின் சந்தாதாரராக விரும்புகின்றது. எரிமலையை ஒவ்வொரு வருடமும் மாதாமாதம் அனுப்பிவையுங்கள். மேலும் இதுபோன்ற உங்கள் சஞ்சிகைகளையும் வாங்க ஆர்வமாக உள்ளோம்.

UNIVERSITAT ZU KOLN

**எரிமலை ஆசிரியர் அவர்கட்கு!**

தமிழீழ விடுதலை ஆதரவாளன் எழுதும் கடிதம் இது. தமிழ் நாட்டில் எரிமலை இதழைக் காணும் வாய்ப்பும், அதுபோது, தமிழீழத்தின் நடப்புக்களை அறிந்துகொள்ளும் மிகப்பெரும் வாய்ப்பும் அண்மையில்தான் எனக்குக் கிட்டியது.

பெரும் மகிழ்வடைந்தேன்
உடன் இம் மடல் வரைந்தேன்.

எனது முகவரிக்கு எரிமலை இதழை அனுப்பிவைத்து உதவுமாறு வேண்டுகின்றேன்.

உங்கள் இதழை எனக்கு அனுப்புவதால் எந்தக்கேடும் வந்துவிடாது. வந்தாலும் அதை இன்முகத்துடன் ஏற்றுக்கொள்ளக்கூடிய மனவலிமை எமக்கு உண்டு என்பதை கர்வத்துடன் சொல்லிக்கொள்ள விழைகிறேன்.

எத்தனை துன்பங்கள் வந்தாலும் சுவாசிப்பதை நிறுத்தமுடியுமா? இயலாது. நிறுத்தினால் நாம் மனிதர்களல்ல. தமிழர்களும் அல்ல.

**அன்புடன்**
**சுந்தரம்**
**தமிழ்நாடு.**

**எரிமலை வாசகர்களிடமிருந்து நிறைய ஆக்கங்கள் வருகின்றன. அவற்றை நாம் ஒவ்வொரு மாத இதழ்களிலும் முடிந்தவரை பிரசுரிக்க முயன்று வருகின்றோம். வாசகர்களிடமிருந்து கடிதங்கள் வந்த போதும், எரிமலை பற்றிய ஆக்கபூர்வமான விமர்சனங்கள் அடங்கிய கடிதங்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. மேலும், அவசியம் ஏற்படின் மட்டுமே எமது வாசகர்களோடு எரிமலை நேரடியான கடிதத் தொடர்புகளை வைத்திருக்கும். மற்றும்படி அனைத்து வாசகர்களுக்குமான கடிதமும், வேண்டுகோளும் அக்கறைப்பூக்கள் பகுதியிலேயே எழுதிவருகின்றோம். இதை உங்களுக்கு வருகின்ற கடிதமாகவே கொள்வீர்கள் என கருதுகின்றோம். உங்களிடமுள்ள ஆக்கங்களை எமக்கு அனுப்பிவையுங்கள். அனுப்பும் போது பிரதியையே அனுப்புங்கள். பிரசுரிக்க தகுதியுடையன என எரிமலை ஆசிரியர் குழு தீர்மானிக்கும் பட்சத்தில் அவை எரிமலையில் பிரசுரிக்கப்படும்.**

- ஆசிரியர் குழு -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**தமிழீழத்திலிருந்து வெளிவரும் "ஆதாரம்" சஞ்சிகையின் 'ஆடி ஆவணி 1992', இதழின் ஆசிரியர் கருத்தை இங்கே பிரசுரிக்கிறோம்.**

**அன்பார்ந்த தமிழீழ மக்களே!**

ஒரு நாடு விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் போது, அந்நாட்டின் வெளி அரசியல், இராணுவ அழுத்தங்களிலிருந்து விடுவிப்பது மட்டுமன்றி, பொருளாதார அழுத்தங்களிலிருந்து விடுவிப்பதும் அவசியமாகிறது. இவ்வாறு பல நாடுகளிலும் விடுதலைப் போராட்டங்கள் நடந்துகொண்டிருக்கும் பொழுதே, குறித்த நாடுகள் பொருளாதார அழுத்தங்களிலிருந்து விடுபடுவதற்கும், வளர்ச்சி பெறுவதற்குமான சிந்தனைகளும், பணிகளும் தொடர்ந்து வந்ததை வரலாறு காட்டி நிற்கிறது.

இந்த வகையில், நாமும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தினைத் தொடர்கின்ற காலத்தில், எமது மண்ணில் உறுதியான பொருளாதார அமைப்பொன்றினைக் கட்டி எழுப்புவது தொடர்பாகச் சிந்திக்கின்றோம், செயற்படுகின்றோம். எமது முயற்சியின் பலனாக, பொருளாதாரத்துறையிலும் நாம் ஓர் வளர்ச்சியைக் காணவேண்டுமானால் இங்கு தொழிற்துறைகள் அபிவிருத்தி செய்யப்படவேண்டும்.

இங்கிலாந்தில் ஏற்பட்ட கைத்தொழிற் புரட்சியுடனேயே உலக நாடுகளில் நவீன தொழில்நுட்ப அறிவின் பரிணாம வளர்ச்சி ஆரம்பமாகியது எனலாம். இங்கிலாந்தில் கைத்தொழிற் புரட்சி ஏற்பட்ட காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தொழில்நுட்பங்களை மற்றைய நாடுகள் பயன்படுத்தி தொழிற்துறைகளை வளர்க்கத் தொடங்கின. குறிப்பாக இக் கைத்தொழிற் புரட்சி ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளின் விரைவான வளர்ச்சியைத் தீர்மானித்தது. இந்நாடுகளில் ஏற்பட்ட வளர்ச்சி, அனுபவங்கள் அவுஸ்திரேலியா, அமெரிக்கா, ரஷ்யா, யப்பான் போன்ற நாடுகளின் தொழில்நுட்ப வளர்ச்சிக்கும், அதன் மூலம் பொருளாதார அபிவிருத்திக்குமான வழியைக் காட்டின.

மேலும் தென்கொரியா, தாய்வான், ஹொங்கொங், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர் போன்ற வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் கைத்தொழிலில் அதிவிரைவான வளர்ச்சியைப் பெறுவதற்கு ஏற்றவாறு, வளர்ச்சியடைந்த நாடுகளின் தொழில்நுட்பங்களை உள்வாங்கி வருகின்றன. மேற்கு நாடுகளின் தொழில்நுட்பங்களையும், அனுபவங்களையும் தனது பண்பாடுகளுக்கு அமைவாக மாற்றி, ஒழுங்கமைத்து, மிகக் குறுகிய காலத்திற்குள் பிரமிக்கத்தக்க வகையில் யப்பான் வளர்ந்து நிற்கிறது. தொழிற்துறைகளில் வளர்ச்சியடைந்த நாடுகளிலிருந்து தொழில்நுட்ப அறிவினைப் பெற்றுக் கொண்டதும், அதைத் தம் தேவைக்கு ஏற்றவாறு பயன்படுத்திக் கொண்டதுமே இந் நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அமைந்தது.

**"ஆயுதம் செய்வோம்**
**நல்ல காகிதம் செய்வோம்**
**ஆலைகள் செய்வோம்**
**கல்விச்சாலைகள் செய்வோம்**
**ஓயுதல் செய்யோம்**
**தலை சாயுதல் செய்யோம்**
**உண்மைகள் செய்வோம்**
**பலவண்மைகள் செய்வோம்"**

**- பாரதியார் -**

ஒரு நாட்டின் பொருளாதாரத் துறையில் ஏற்படும் அபிவிருத்தியானது, அந் நாட்டின் தொழிற்துறை மற்றும் விவசாயத்துறையில் ஏற்படும் அபிவிருத்தியின் விளைவாகவே அமையும். மேலும், நாட்டின் தொழில்நுட்ப அறிவு வளர்ச்சியே அங்கு தொழிற்துறைகளில் ஏற்படும் வளர்ச்சிக்கு அல்லது அபிவிருத்திக்கு உறுதுணையாகும். நாமும் எமது மண்ணில் உறுதியான பொருளாதார அமைப்பினைக் கட்டி எழுப்ப முயற்சிக்கும் இவ்வேளையில் இங்கு தொழிற்துறைகளில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கான, தொழில்நுட்ப அறிவினைத் தேடி வளர்க்க வேண்டியவர்களாக, அதற்கான வழிவகைகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்று உலகெங்கும் பரந்துபட்டு வாழும் எம் மக்கள் தனியே பணம் ஈட்டல் என்ற குறிக்கோளுடன் மட்டும் உழைப்பது வருத்தத்திற்குரியதே. உண்மையில் வெளிநாடுகளில் வாழ்பவர்கள் எமது மண்ணிற்குத் திரும்பி வரும்போது வெறும் பணத்தையும், புதிய நுகர்வுப் பழக்கங்களையும், வெளிநாட்டுக் கலாச்சாரக் கலவைகளையும், புதிய நோய்களையும் கொண்டு வருவதனால் எதுவித பயனுமில்லை. இவற்றைப் புரிந்து கொண்டு தாம் வாழ்கின்ற நாடுகளில் தொழில் நுட்ப அறிவு, அனுபவங்களைப் பெற்று வந்தால், வெளிநாட்டில் தேடிய செல்வத்தையும், பெற்றுக் கொண்ட தொழில்நுட்ப அறிவையும் பயன்படுத்தி இங்கு தொழில் முயற்சியை ஆரம்பிக்கவும், அதன் மூலம் தாம் பயன் பெறுவதுடன் மட்டுமல்லாது, நம் மண்ணில் தொழிற்துறைகளை வளர்க்கவும், நம்நாடு தொழிற்துறைகளில் உலகளாவிய ரீதியில் சிறந்து விளங்கவும் பெரும் பங்காற்றியவர்கள் ஆவார்கள்.

நன்றி

**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்.**




"வெளிநாட்டில் இருந்து என்ன கொண்டு வாறீங்க மாமா?"

"டி.வி, டெக், வீட்டுக்குத் தேவையான சாமான் எண்டு...."

"எங்கட நாட்டுக்குத் தேவையான தொழில்நுட்பம் ஏதாவது கொண்டு வந்திருக்கலாமே மாமா"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நூல் அறிமுகம்.

# புதிய நூல் !... புதிய திருப்பம் ?

வணிகத்தின் உலகத் தலைநகரான நியூயோர்க்கில் கடந்த கோடையில் ஒரு நூல் ஆங்கிலத்தில் வெளியானது. 'இது ஒரு வேறுபட்ட நூல்' என்று நூலின் முகப்பே ஓர் எண்ணத்தை உருவாக்கிவிடுகின்றது. முன்பக்க முழுப்பக்கத்தில் மூன்றில் இரண்டு பகுதியை புத்தபெருமானின்

## இழிந்தவன் மனிதன் ஒருவனே:


### சிறிலங்காவின் அவலம்

சிலைவடிவம் ஆட்கொண்டுவிடுகின்றது. தூய்மையின் வடிவமாகவோ அன்றேல் 'நிர்வாண' நிலையின் உருவகமோ புத்தரின் சிலை வடிவு வெள்ளையாகத் தோன்றுகிறது. புத்த பெருமானின் தலையின் இடப் பக்கத்தில் (நூலின் வலப்பக்கக் கோணத்தில்) தமிழீழ விடுதலைப் புலிகளின் சின்னம் மஞ்சளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. நீலப் பின்னணியில் முன்பக்கத்து மூன்றில் இரு பகுதியில் தமிழ் எழுத்துக்களும் ஒரு பகுதியில் சிங்கள எழுத்துக்களும் மங்கலாகத் தெரிகின்றன.

நூலின் தலைப்பு: **Only Man is Vile; the Tragedy of Sri Lanka** இத்தலைப்பை மொழி பெயர்ப்பின் இழிந்தவன் மனிதன் ஒருவனே: சிறிலங்காவின் அவலம். இந்தத் தலைப்பையும், முன்பக்கப் படத்தையும் வைத்தே ஒரு விமர்சனக் கட்டுரை வரையலாம் போன்று பல எண்ண அலைகள் எழுகின்றன. விமர்சனமான தலைப்பு.

நூலாசிரியர்: வில்லியம் மக்கவன் (**William McGowen**) நியூயோர்க் சஞ்சிகைகளில் இவரின் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. புகழ்பெற்ற அபிப்பிராயங்களை உருவாக்கும் சக்தியுள்ள நியூயோர்க் ரைம்ஸ் சஞ்சிகையில் வில்லியத்தின் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. வில்லியம், ஈராண்டுகள் இத்தீவில் தங்கியிருந்து இனப்பிரச்சினையை, போர் நிலைப்பாடுகளை அலசி, ஆராய்ந்து வரைந்துள்ளார்.

இனப்பிரச்சினை இத்தீவில் வளர்வதற்கும், பிரச்சினை தீர்க்கப்படாது இருப்பதற்கும் மூல காரணமாக இருப்பவர்கள் பௌத்தகுருமார் என்று துணிந்து சுட்டிக்காட்ட முனைந்துள்ளார். நூலாசிரியர் பல விடயங்களை போர்க்காலச்




சம்பவங்களை நேரில் பார்த்து வருணித்துள்ளார். தனது அனுபவங்களை அப்பட்டமாக வரைந்துள்ளார்.



இலங்கை மக்களை சிறுமைப் படுத்தும் வசனங்களும் இல்லாமல் இல்லை.

இலங்கையின் இனப்பிரச்சினையையிட்டு ஒரு மேற்கு நாட்டவர் எழுதிய முதல் பெரிய நூல் இது வென்று துணியலாமா? அத்துடன் இனப்பிரச்சினைக்கு மூலகாரணமென்று இனங்காட்ட ஒரு மேற்கு நாட்டவர் முனைவதும் முதல் முயற்சி தானே? "குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல் போவதே இலங்கையின் அவலம்" என்று சில வருடங்களின் முன் இலங்கையின் இனப்பிரச்சினையையிட்டு உரையாற்றிய ஒக்ஸ்போட் பல்கலைக்கழக டேவிட் செல்போண் கூறியது இவ்விடத்தே குறிப்பிட்டு ஒப்பிடத்தகும்.

இந்தப் புதிய நூலைப் படிக்கும் பொழுது, மேற்குநாடுகளின் அரசியல் சிந்தனையில் இந்நூல் ஒரு புதிய திருப்பத்தைக் கொண்டுவருமா என்று கேட்கத் தூண்டுகிறது. ■□

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தாயுமானவன்

ஈழக் கரையினில் மோதும் அலைகடல்
ஓங்கிக் குரல் கொடுக்கும்;
தளபதி கிட்டெங்கே? கிட்டெங்கே? என்றது
மண்ணில் துயர் கரைக்கும்.

தீருவில் வெளியிலே மனிதப் பெருங்கடல்
வந்து அலை மோதும்;
தளபதி இங்குள்ளான், இங்குள்ளான் என்றது
விண்ணதிரக் கூறும்.

நெருப்பினை வயிற்றிலே சுமந்தவள் வயிறு
பற்றி எரிகிறது;
தேசத்தை தோளிலே சுமந்து நடப்பவன்
நெஞ்சிலே சரிகிறது.

தாயின் விழிகளில் கொடுதுயர் சுமந்து
கண்ணீர் வழிகிறது;
தலைவனின் விழிகளில் கொடும் துயர்
– களைந்திடும்
செந்தீ தெரிகிறது.

இடியோடு பொருதும் பேரிடி இவனின்
பார்வைக்குள் பல கதைகள்;
பரிவோடு அவனது பாச அணைப்பினுள்
தாய்மையின் அகத் தழுவல்.

அன்புகொள் நெஞ்சினில் அனலாய் எழுவது
ஈழத்தின் வரலாறு;
(அவன்) பண்புகொள் பார்வையில் பகை
– முகம் தெரியுது
மனமே நீ ஆறு!

- ஜெயா -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## மக்கள் மனங்களில் தீ!

## வரலாறு காணாத எழுச்சி!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒரு கைப்பிடியுள்

**சே. போ. சிவனேசு**

**சிறுகதை**

அந்தப் பிடிக்குப் பொருளென்ன? இறுகப் பற்றிய பிடிக்குள் இருந்தது மண் வெறும் மண்..... வெறும் மண்ணா? சுதந்திரத்தின் குறியீடு! தாயகத்தின் தவிப்புத் தெரிந்தது; மக்களின் கொதிப்புத் தெரிந்தது.... வெறும் மண்ணா? கையிலெடுத்த தினக்குறிப்பு ஏடு இத்தகைய வினாவையும், விடைகாணும் முனைப்பையும் தூண்டிவிட்டது. இவன் பொறுப்பிலுள்ள படைப்பிரிவிலிருந்து நேற்று விதையாகிப் போன மாவீரனது பக்கங்களைப் புரட்டினான். குறிப்புவாரியான பதிவுகள் குறுகலாய் இருந்தது உருவிற்தான். உள்ளடக்கம் பரந்தது கடுகினது காரம்போல். புதிய சிந்தனைகள், பட்டறிவின் வெளிப்பாடுகள், ஆங்காங்கே கவிதைகளு சில. கண்கள் வழி நுழைந்த மாத்திரத்திலேயே உள்ளார்ந்தத்தைக் கவ்வியது ஒன்று:

"எனது கைப்பிடி சிறியதே
எனினும் உறுதி மிக்கது!
உள்ளிருப்பது ஒருபிடி மண்ணே
எனினும் எனது தாயகம்!
கற்றுக்கொள் எதிரியே
கனத்த இராணுவப் பாதணி நசுக்கலில்
கைப்பிடி நழுவுதல் நடவாது
எலும்பு நொருங்கட்டும்,
விரல்கள் தெறிக்கட்டும்
கையின் அழிவுவரை
கைப்பிடி தளராது!
அழிந்து,
பின்னும் உனதெண்ணம் நடவாது
என்னவர் என்னைத் தொடர்வதனால்"

கபாலத்துள் பளீரிட்டது. ஓ! இதுதான் பொருளா? என்னைப் போலத்தான்; அன்றைக்கு நானும் இப்படித் தான். அது பிரிவின் வெப்பிசாரத்தில் நடந்தது. அவனையும் கூடப் பற்றியிருக்கலாம்; என்றாலும், அவனிடம் ஒரு திடம் தெரிந்தது. ஒரு நம்பிக்கை.

என்ன விதமாய்ச் சமர்க்களமாடினான்! தாயகத்தின் தகிப்பு, தலைவரின் பொறுப்புணர்வாய்த் திரண்டு, போராளிப் பிரசவம் அங்கு சுறுசுறுப்பிற்கும், வீரத்திற்கும் போதனை செய்து கொண்டிருந்தது. எங்கிருந்தோ வந்தன எதிரிதரப்பு துமுக்கிக் குண்டுகள். பன்னாடையாகிற்று அவனுடல். புகழுடல் கிடந்த நிலையின் நிழல் மீண்டும் இவனுள் வீழ்ந்தது. முகம் குப்புற.... அடடா, சரிந்த நிலையிலுமா மண்ணை முத்தமிடுகிறான்? இரு கைகளுமே மூடிய நிலை. ஒன்றில் அவனது துமுக்கி, மற்றதுள்தான் மண். வாரித் தன்னுடன் கொண்டு செல்லும் பாங்கல்ல; யாரிடமோ


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வாஞ்சையுடன் ஒப்படைக்க முனைபவனாக....

சிந்தனை பின்னோக்கி விரட்டப்பட்டது; எண்பதுக ளில் தரித்தது.

www.tamilarangam.net

* * *



## இந்துஜா

1992ம் ஆண்டு வைகாசி மாதம் இந்துஜா தனது தாய், தந்தை, தங்கை ஆகியோரோடு வற்றாப்பளை அம்மனை வழிபடச் சென்றபோது முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து சிறிலங்காப் படைகள் ஆலயம் மீது நடாத்திய ஷெல் தாக்குதலில் தனது கையை இழந்ததோடு, அன்பான தாய் தந்தையரையும், அவளது அன்புத் தங்கையையும் இழந்து நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறாள்.

அவளையே இப்புகைப்படத்தில் காண்கிறீர்கள்.

இந்துஜாவின் இத்துயர் தோய்ந்த கதை 1992, மார்கழி எரிமலை இதழில் "கொலை" என்ற தலைப்பில் வெளிவந்தது.

என்னுடன் இன்னுமொரு பத்துப் பேர் படகுக்காக நடக்கி றோம். பனைகள் செறிந்த நிலப்பரப்பு; ஊடறுத்து ஓர் ஒற்றையடிப் பாதை; நெடுகி லும் புதர்கள், இந்த இருளைப் போலவே அடர்த்தி. எனக்குள் ஒரு யோசனை 'இந்தப் பிரபஞ் சமே அடக்கம் செய்யப்பட்டு விட்டதா என்ன?' அமைதி! சில்வண்டுகளின் ரீங்காரம், அவ்வப்போது காவோலைச் சலசலப்பு, தூரத்தே அலைகள் கட்டிப் புரள்வதன் ஓசை. கழித் துப் பார்த்தால் மயான அமைதி. எல்லோர் உதடுகளும் ஊசி இழை கொண்டு தைத்து விட்டது போல.... பேசக்கூ டாது. ஏற்கனவே பொறுப்பா ளர் எச்சரித்திருந்தார். முன்னே வழிகாட்டியாய் அவர்தான்.

ஒற்றையடிப் பாதையில் அடிக்கடி வளைவு. பகலில் பார்த்தால் எப்படியிருக்கும். பனை ஒன்றின் உச்சியில் நின்று பார்க்க வேண்டும், அடித்துப் போட்ட பாம்புதான்.

கால்களில் உளைவெடுத் தது. குடாவின் மத்திய பகு திக்கு, திணிவான செம்மண் தரைக்கு மட்டுமே பெரும்பா லும் முத்தம் கொடுத்துப் பழ கியவை. ஐதான வெண் மணல் பரப்பில் பாதங்கள் புதையுண் ணப் புதையுண்ண அடி எடுப் பது, தொடர்ந்து நடப்பது புதிது. கால் தசை நார்களில் குத்துவலி நாலாபக்கமும். தலையைத் திருப்புகிறேன். இருளை ஊடுருவக் கண்கள் கடினப்பட்டன. மற்றவர் உரு வங்கள் மங்கலாய்த் தெரிந் தன. பெரும்பாலும் என்னைப் போலத்தான்; சிரமப்பட்டனர். என்னவென்றாலும் வேகத்துக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

குக் கெடுதியில்லை. நடையின் சீரிற்கு இடையூறில்லை. நெருப்போ நெஞ்சு நிறைய; அந்த வெக்கையால் வந்த தாகம் இதயம் முழுக்க. இதன் வலு தள்ளிச் சென்றது. அப்போதைய ஒரே குறி ஆயுதப் பயிற்சி. இப்போது போலல்ல. இப்போது எத்தனை பெரிய வளர்ச்சி கண்டுள்ளது பயிற்சியில் கூட..... அப்போது அண்டை நாட்டுக்குப் போக வேண்டும் பயிற்சிக்கு. எங்கள் தாகமே வேகமாய் வெளிப்பட்டதால் காலுளைவு பெரிதாய்ப் படவில்லை.

எங்கோ ஒரு தொலைவில் நாயொன்று குரைத்தது. சட்டென்று நிற்கிறோம். சுற்றும் முற்றும் கவனிக்கிறோம். கண்ணுக்குப் புலப்படாத் தொலைவையுங் கூடக் கவனிக்கிறோம், மனக் கண்ணால்.

## கொழுந்துக் கூடைகள்

சுரண்டல் தராசுகளில்
கொழுந்துக் கூடைகளை
கொழுவி விட்டு
தேனீருக்காக ஏங்கும்-இத்
தேயிலைச் செடிகள்...
அக்கினியாய் அணிவகுத்து
அவலங்களை
எரிப்பது எந்நாள்.

- கஸ்தூரி -

அப்படி அவ்வப்போது நடந்தது. ச்சே, எங்கள் நிலத்தில் நாங்கள் நடப்பதற்கே எத்தனை எச்சரிக்கை. எவ்வளவு கவனம். எங்கேயோ இருந்து அதிகாரம் பண்ணுகிற யாரோ, ஒரு பிறத்தியானுக்கு எவ்வித அச்சம்!

எனக்குள் கொதிப்பு இன்னும் இன்னும் பற்றியது. ஏதோ ஒரு வேகம்; சரியாகப் பெயர் நினைவில்லை. ஒரு கவிஞன் உரைத்து எனக்குள் பாடுகின்றான்:

"எங்கள் தந்தையர்
தவழ்ந்த நிலமது
எங்கள் தாயார்
அளைந்த மண்ணிது
தவழவும் அளையவும்
தடைகளா எமக்கு?

எங்கள் தந்தையர்
உழுத வயலிது
எங்கள் தாயார்
கதிர் சுமந்த வரப்பிது
உழவும் சுமக்கவும்
தடைகளா
எமக்கு?

எங்கள் தந்தையர்
ஆண்ட கடலிது
எங்கள் தாயார்
காத்த கரையிது
ஆளவும் காக்கவும்
தடைகளா எமக்கு..."

உதடுகள் அசையவில்லை. உள்ளம் முணுமுணுத்தது; திரும்பத் திரும்ப ஒப்புவித்தது. வரவர வரிகள் அனலாகின; அனற் சக்கரமாய் சுழன்றன; ஊதுலையாய் உள்ளுக்குள் விளாசியது.

வீசி வந்த மெல்லிய காற்றில் ஒரு மாற்றம். புழுக்கம் கலந்த ஈரலிப்பை உடலில் அப்பியது புரிந்தது. அலைகள் உருண்டு, புரண்டு, கும்மாளம் போடுவது, ஓடிவந்து கரையேறுவது காதில் தெளிவாய் விழுந்தது. அண்மித்துவிட்டோம்.

* * *

நடக்கத் தொடங்கி பதினைந்து மணித்துளிகள். ஈரமும், குளிர்ச்சியுமாய்ப் பாதங்களைத் தீண்டியது; அடியிலே எறும்பு ஊர்வது போன்ற கூச்சம்; சில்லென்றது முள்ளந்தண்டுகள் மின்னல் வெட்டியது போல் உச்சந்தலைவரை..... அலை திரும்பி ஓடியது தொட்டுவிட்டேன் என்ற வெற்றிக் கொண்டாட்டம்; கெக்கெலி கொட்டிச் சிரித்தபடி ஓடியது.

தாரகைகள் உதவின; அலையைப் பின்தொடர்ந்து ஓடிய பார்வையில் படகு விழுந்தது. மங்கலாய்த்தான் தெரிந்தது. ஆனாலும், பேயாய்த் திகைக்க வைத்தது. காதுகளை ஊடுருவும் பனிக்குளிர் ஊசி போல்; நெஞ்சுக்குள் வேதனையால் சிலிர்க்கிறேன். இதற்குமேல் நகர முடியவில்லை. கால்கள் இறுகிப் போனது போல இருந்தது. நன்றாய்ப் பார்க்கிறேன். இரண்டும் அதிவேக இயந்திரங்கள்; எண்ணை குடிக்கிற, கடலில் பாய்கிற குதிரைகள். இரண்டு மணித்தியாலமே மிச்சம்; அடுத்தகரை வேறொரு நாடு. பிரிவுத்துயர் நெஞ்சைப் பிழிந்தது. போகப்... போகப் போகிறேன்!... இந்தத் தாயை தாய் மண்ணை விட்டு.... பிறந்தேன், வளர்ந்தேன்.... அவ்வளவுதானா? இதில் நான்; என்னில் இது பிணைந்தே போன.... இங்கு

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருக்கிறது ஆதாரம். இந்தப் புழுதி கால் நக இடுக்குகளுக் குள் பதிந்து கிடக்கிறது. சோற்றின் சிவப்பு..... ச்சே! என்ன இது? ஏன் இப்படி அலைமோதுகிறது மனம்? அது தான்.... திரும்பி வரத்தானே.... ஆனால், வாய்ப்புக் கிடைக் குமா?.... அப்படியொரு பொற்காலம்.... விடுதலைக்கு விலையாய் உயிரைப் பேசியா யிற்று..... எந்த நேரத்திலோ?.... எந்த இடத்திலோ?.....

சின்னச்சின்னச் சலனங்க ளுக்கு வலுவிருப்பதில்லை. கடமையுணர்ச்சியுள்ளவனைக் கட்டிப்போட அசைக்கிறேன். ஏதோ ஒரு உள்ளுந்துகை நகர வைத்தது. சற்றுப் பின்வாங்கி வருகிறேன். அலைகள் தலை வருடி விடுவதற்கு எட்டாத கரையில் குனிகிறேன். உண்மை யாக என்ன செய்கிறேன் என்று எனக்கே தெரியவில்லை. பய பற்றாய்க் குனிகிறேன். அடுத்த நொடியில் எனது கையில் ஒரு பிடி மண். அப்போது புரிந்தது. "என் தாய் ஆசீர்வதித்து அனுப் புகிறாள், புனிதப் பிரசாதம் தந்து." அந்தக் கவிஞன் திரும்ப வும் என் கபாலத்துள் பாடு கிறான்;

"எங்கள் தந்தையர்
தவழ்ந்த நிலமிது
எங்கள் தாயார்
அளைந்த மண்ணிது"

தாய் தந்தைத் துணிப்பை யில் கவனமாய்ப் பத்திரப்ப டுத்துகிறேன். என்னையறியா மலே நெஞ்சு நிமிர்கிறது. படகை நோக்கி நடக்கிறேன்.

* * *

"தோழா! மண்ணிற்காய் மாண்டவர்கள் எத்தனை பேர்?" அந்த வீரனின் வர லாற்றுக் குறிப்பை வரையத் தொடங்கினான். "எல்லைத் தகராற்றில் வாய்க்கால், வரப் புப் பிரச்சினைகளில்.... எல்லை, எல்லை வேலி ஓரங்கு லம் பிசகியதற்கே வாளெடுத் தோர் எத்தனை? எத்தனை நீள ஆறாய்க் குருதி ஓடியிருக் கும்? இன்றைக்குத்தான் மண்ணிற்காய் மாள்வது நாளாந்த நடப்பு. இதன்மீது மட்டும் எந்த ஏளனப் பார்வை களும் படியமுடிவதில்லை; புனிதப் பயணமெனப் போற்று தல் பெறுகிறது. இங்கு நிகழ் கின்ற ஒவ்வொரு வீழ்கையும் ஈகையாய் உயர்கின்றது ஏன்? முன்னவைபோல் தன்னலக் குறுக்கத்துள் முடங்கிவிடக்கூ டியதல்லவே நோக்கு? கருவி ஏந்துகின்ற ஒவ்வொருவனும் வீரனாய் நிமிர்கின்றான். அவ னுள் கருத்தெல்லாம் எதிர்கா லச் சந்ததி; உயிரினும் மேன் நிலையில் விடுதலை உன்ன தத்தை அன்று மீண்டும் உன்வ சம் கண்டு கொண்டேன்....."

எழுதிக் கொண்டே போனான். சடுதியாய் ஒரு விந்தை நிகழ்ந்தது. அவன் வசமின்றியே அவனிடம் அவ னிற்கே திகைப்பாய் இருந்தது. நிறையப் படித்திருக்கிறான்; ஒரு கவிதை கூட எழுதிப் பழக்க மில்லை. வரலாற்றை எழுதி முடிக்கும் தறுவாயில் தெறித்து விழுந்த ஒரு கவிதையில் கூட எத்தகைய உள்ளார்ந்த ஈடு பாடு! வரலாற்றுக் குறிப்புக ளைப் பிரசவிக்க முனைய, இரட்டைப் பிரசவமாய் கவி தையுங்கூட: "ஓ, வீரர்களே!

பொருண்மையும் உன்னத மும்

உங்கள் இறப்பிற்கு மட்டு மல்ல,

ஒவ்வொரு அசைவிலுங் கூட

இறக்க நேர்கிற
இறுதி நொடியிலுந்தான்
அது வெளிச்சமாகிறது.

எங்கு கற்றீர் இந்த மகத்து வத்தை?" □□□


செங்கதிர் வெளியீடு

## தரிசனம்

பார்வை - 8




கேணல் கிட்டுவின் நிகழ்வுகள் சுமந்த சிறப்பிதழ்

வீடியோ இதழ் கேணல் கிட்டுவின் நிகழ்வுகள் சுமந்த சிறப்பிதழாக வெளி வந்துள்ளது.

"கிட்டு எங்கள் வரலாற்று நாயகன்"
மண்ணின் நிகழ்வுகள்
கலை ஆக்கங்கள்
புலம்பெயர்ந்த மக்கள் தொடர்பான நிகழ்வுகள் என்பவற்றை உள்ளடக்கிய னவாக இச்சிறப்பிதழ் அமைந்திருக்கி றது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# சுதந்திரத்தைத் தேடி...



சட..... சட..... என்ற துப்பாக்கி வேட்டொலிகளாலும், டும்.... டுடாம்.... என்ற குண்டுச் சத்தங்களாலும் மன்னார், அடம்பன் பிரதேசம் அதிர்ந்து கொண்டிருந்தது.

அடம்பன் காட்டுப்பகுதியில் எமது அணியினருக்கும் சிறிலங்கா குண்டர் படையினருக்கும் கடும் மோதல் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ராதா அண்ணை மன்னாரைப் பொறுப்பேற்ற இரண்டாம் நாளே இம்மோதல் நடந்தது. பெரிய மரமொன்றின் கீழ் நிலையெடுத்திருந்த தமயந்தியும் அவள் தோழியும் மெல்லிய குரலில் கதைக்கின்றனர்.

“தமயா, எத்தினை ரவுண்சடி வச்சிருக்கிறாய்?”

“10ரவுண்ஸ்தான் வைச்சிருக்கிறன்” சத்தம் போடாதை.

தமயந்தியின் முதற்களம் இதுதான். முன்பின் போரனுபவமில்லாததால் எதை எடுப்பது, எதை விடுவது என்று தெரியாமல் தன்னுடைய 303 துப்பாக்கிக்கான 10 ரவைகளை மாத்திரமே வைத்துக் கொண்டு உற்சாகமாகச் சண்டையிட்டாள். இம்மோதலில் புலிகள் சளைக்காது நின்று போரிட்டதால் இராணுவம் பெரிய இழப்புக்களுடன் பின்வாங்கியது.

எம்மண்ணில் சிறிலங்கா இராணுவத்தினர் அட்டூழியங்கள், ஆக்கிரமிப்புக்கள் செய்ய முன், செல்வம் கொழித்த இடமும், காலங்காலமாக பாரிய நெல்விளைச்சல் கண்டதும், பச்சைப்பசேலென காட்சியளித்த இடமுமாகிய மன்னாரின் ஆத்திமோட்டையில் பிறந்தவள் தமயந்தி. க.பொ.த. (சா/த) வரை மன்னாரிலேயே படித்தவள்.

www.tamilarangam.net

1984ல் மன்னார் 3ம் பிட்டியில் இராணுவத்தினரின் ட்ரக் வண்டியொன்று புலிகளின் கண்ணிவெடியில் சேதமுற்றது. அதைத்தொடர்ந்து சிங்கள இராணுவத்தினர் 3ம் பிட்டியிலுள்ள கடைகளை எரித்து, பல பொதுமக்களைச் சுட்டனர்.

இதன் பின்னர்தான், மன்னாரில் இராணுவத்தினரின் அனர்த்தங்கள் ஆரம்பமாகின. அந்தத் தாக்கத்திலேயே தமயந்திக்கு போராடவேண்டுமென்ற உத்வேகம் ஏற்பட்டது.

கமலலோஜி என்ற இயற்பெயரைக் கொண்ட தமயந்திக்கு ஒரு அக்காவும், மூன்று தங்கைகளும், மூன்று தம்பிமாரும் இருக்கின்றனர். இவளது குடும்பம் இவள் போராட்டத்தில் இணைந்த காலத்தில் வறுமையிலும் செம்மையாக வாழ்ந்துகொண்டிருந்தது. பயிற்சியில் மிகவும் கெட்டிக்காரியான இவளுக்கு கயிறு ஏறுவதில் தனியான ஆர்வமும், திறமையும் உண்டு. “இண்டைக்கு நான்தான் முதலில் கயிறு ஏறுவது” என்று சொல்லிக்கொண்டு உற்சாகமாக ஏறுவாள். இயக்கத்தில் இணையும்போது இவளுக்கு 16 வயதுதான்.

1987ல் நாவற்குழியில் இந்திய இராணுவமுகாமுக்கு வெளியே சென்றியில் நிற்கும் போது மக்கள் இவளைப் பார்த்து வியப்படைவர். ஏனென்றால், அவ்வளவு சிறியவளாகத்தான் தமயா இருந்தாள்.

கோட்டையில் சென்றியில் நின்றபோது ஒருநாள், இராணுவத்தினரின் ரவையொன்று தமயந்தியின் தலையைத் தாக்கியது. சிகிச்சைக்காக இவள் இந்தியாவுக்குப் போனாள். தலைக்காயம் ஆறியும் தலையிலுள்ள ரவையை எடுக்கமுடியாதென வைத்தியர்கள் கூறியதால், இந்தியாவிலேயே நின்று காயமடைந்த போராளிகளைப் பராமரிக்கும் வேலையில் ஈடுபட்டாள். 1989 வரை இந்தியாவிலேயே நின்ற இவள் அதன்பின் மணலாறுக்கு வந்தாள்.

சிறிதுகாலம் காட்டிலே இருந்துவிட்டு மீண்டும் நாட்டுக்கு தமயந்தியின் அணி உட்பட மகளிர் படையணி வந்தது. இதன்பின் பலாலியில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இராணுவ நடவடிக்கை தொடரப்பட்டபோது இவளது அணி கட்டுவன் பகுதியில் காவலில் நின்றது.

ஒருநாள் அதிகாலையில் கட்டுவன் காவலரனை நோக்கி இராணுவத்தினர் ஆட்லறி ஷெல் தாக்குதலை தொடர்ச்சியாக மேற்கொண்டனர். தனது அணியினரை கவனமாக இருக்குமாறு எச்சரித்துவிட்டு முன்சென்றி நிற்குமிடம் நோக்கி விரைந்தாள். தமயந்தியின் துப்பாக்கி இராணுவத்தினர் நின்ற திசை நோக்கி இயங்கியது. தமயந்தியின் அணியினரும் தாக்கத் தொடங்கினர். கட்டுவனை நோக்கி முன்னேறிய இராணுவம் இழப்புகளுடன் பின்வாங்கியது. தமயந்தியின் அணியில் இரண்டு புலிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். வவுனியாவின் பூவரசங்குளத் தாக்குதலில் தமயந்தியும் அவளின் அணியினரும் பங்கேற்கின்றனர்.

தமயந்தியின் உயிர்த்தோழிகளான கப்டன் அஞ்சனா, கப்டன் உஷா ஆகிய இருவரின் இழப்புக்களும் அவளைப் பாதித்திருந்தாலும், அதை வெளிக்காட்டாமல் எல்லாப் போராளிகளோடும் அன்பாகப் பழகுவாள். எல்லாப் போராளிகளுக்குமே தமயந்தி என்றால் உயிர். 'தமயக்கா, தமயக்கா' என்று உயிரை விடுவார்கள்.

ஆனையிறவைத் தாக்குவதற்கான ஆரம்ப வேலைகள் நடந்து கொண்டிருந்தன. தமயந்தியின் அணி தாக்குதல் அணியாகப் பிரிக்கப்பட்டிருந்தது. பயிற்சிகள் நடந்துகொண்டிருந்தன.

"வெற்றியோடை திரும்பி வரவேணும் தமயா" தமயந்தியின் உயிர்த்தோழி சொல்லுகிறாள்.

"நான் சாகமாட்டன். ஆனையிறவைப் பிடிச்சு இயக்கச்சி ரோட்டாலை என்ரை குறாப்


www.tamilarangam.net

கப்டன் தமயந்தி

பைக் கூட்டிக்கொண்டு நடந்துவருவன். அப்ப பார்" என்று தோழிக்கு உறுதி கூறுகிறாள் தமயந்தி.

தனது துப்பாக்கியைத் துடைக்கும்போது "இந்தமுறை மாத்திரம்தானே பழைய ரைபிள். ஆனையிறவிலை பொயின்ரை அடிச்சு நாலைஞ்சு ரைபிள் எடுப்பன். பிறகு ஒவ்வொரு சண்டைக்கும் ஒவ்வொரு ரைபிளைக் கொண்டு போவேன்." என்று சொல்லிச் சொல்லித் துடைத்தாள்.

பரந்தன் பக்கமாக நடைபெற்ற முதல்நாள் தாக்குதலில் கையில் காயமடைந்தாள்.

மீண்டும் 3ம் நாள் பரந்தன் பக்கம் புலிகள் தாக்கினார்கள். தாக்குதலுக்குப் போகமுன்னர் புதுச்சீருடையை அணிந்து வோக்கி, ரோச்லைட் எல்லாவற்றையும் அணிந்து கொண்டு "சாகிற நேரம் நீற்றாகச் சாகவேணும்" என்று சொல்லிக் கொண்டு புறப்பட்டாள்.

தாக்குதலை ஆரம்பிக்குமாறு வோக்கியில் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, எமது பகுதியினர் தாக்குதலை ஆரம்பித்தனர். தமயந்திக்குக் காட்டப்பட்ட எதிரியின் காவலரணிலிருந்து 50 கலிபர் துப்பாக்கியால் இராணுவத்தினர் சுட்டுக்கொண்டிருந்தனர். தமயந்தி தாக்கவேண்டிய காவலரணுக்கு முன்னால் இராணுவத்தினர் பாதுகாப்புக்காக மண்மேடு அமைத்திருந்தனர்.

"மண்மேட்டை நெருங்க வேண்டாம்" என்று தமயந்திக்கு தொடர்ந்து வோக்கியில் சொல்லப்பட்டுக் கொண்டிருந்தாலும், காவலரணை அழிக்க வேண்டும் என்ற ஆவேசத்தில், மண்மேட்டை நோக்கி வேகமாக முன்னேறினாள். அவளுடன் அவளின் அணியிலுள்ள மேலும் இரு போராளிகளும் முன்னேறிக் கொண்டிருந்தனர்.

தமயந்தி மண்மேட்டின் மேலேறி காவலரணுள் புக முயற்சிக்கையில் இராணுவத்தினரின் சரமாரியான ரவைத் தாக்குதலால் மண்மேட்டிலேயே குப்புற விழுந்தாள். அவளுடன் கூடச் சென்ற இருவரும் கூட தமயந்தி மாதிரியே மண்மேட்டிலேயே வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

எங்களால் தமயந்தியையோ, அவளுடன் சென்ற சக போராளிகளையோ தூக்கிவர முடியவில்லை. காரணம் தமயந்தியின் உடலுக்கும், காவலரணுக்கும் இடையே 10யார்தான் இடைவெளி. மரணத்தில் கூட தமயந்தி தன் T81 ஐப் பிரியவில்லை. அதை அணைத்தபடியே குப்புறக்கிடந்தாள்.

எந்நேரமும் சிரித்தபடியே இருக்கும் தமயந்தியின் முகத்தையும்.....

ஆனையிறவு மோதலுக்கான பயிற்சி நடந்து கொண்டிருந்தபோது எல்லோரும் மேடையில் ஏறி நிகழ்ச்சிகள் செய்ய வேண்டும் என்று ஜெயந்தியக்கா சொல்லிவிட்டார். மின்சாரவசதி இல்லாததால் ஜெயந்தியக்காவின் பஜிரோ லைட் வெளிச்சத்தில்தான் நிகழ்ச்சிகள் நடந்தன. தமயந்திக்கு மேடையில் ஏறுவதென்றால் கூச்சம். நிகழ்ச்சிகள் செய்து முடிந்துவிட்டது என்று நினைத்து யாரோ பஜிரோ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

லைட்டை அணைக்க, அந்த நேரம் கப்டன் லக்ஷியும், தமயந்தியும் மேடையிலேறி "சின்னப்பாப்பா எங்கள் செல்லப் பாப்பா" என்று பாடிப்பாடி ஜீன்ஸைத் தூக்கிப்பிடித்தவாறு சிறு குழந்தைகள் போல் அரையிருட்டில் ஆடியதையும்......

யார் கமராவுடன் வந்தாலும் தன்னையும் படம் பிடிக்குமாறு கேட்டு ஓடி ஓடி விதம் விதமாக நிறையப்படங்கள் எடுத்து வைத்ததையும்.....

www.tamilarangam.net

ஆனையிறவு சண்டைக்காக முகாமிலிருந்து புறப்படும் போது 'ரதி, மீரா, ராதா மூன்றுபேரும் தன்னை விட்டு விட்டுத் தாங்கள் மட்டும் சேர்ந்து சாப்பிட்டுவிட்டார்கள்' என்று சிறுபிள்ளைபோல் கோவித்ததையும்.....

உயிருள்ளவரையில் மறக்க முடியாது.

**நிலா**

## எங்கள் பொழுதும் இனிதே



வர்த்தகம் செய்ய வழிகள் பல இருக்கு
யுத்த நிலைமை மிகச் சாதகமாய்த் தானிருக்கு
மின்சாரம் இல்லை,
விளக்கெரிக்கும் மண்ணெண்ணை
தன்பாட்டுக்கு ஏறும், இறங்கும், தலைமறையும்
பொம்மர் கிளாலிக் கடல் மேல் பறந்தாலோ
நம்ம சனம் விலையை நாலு மடங்குயர்த்தும்
தீப்பெட்டியைக் கண்டு மாசம் இரண்டாச்சு
மாப்பெட்டி, சீனி, மருந்து வகைகளெல்லாம்
உச்சவிலை தேங்காய் இருபதுக்கு மேலாலை....

வர்த்தகம் செய்ய வழிகள் பல இருக்கு
யுத்த நிலைமை மிகச் சாதகமாய்த் தானிருக்கு

பொச்சு மட்டை ஈரம், புகையாய்க் கிளம்புதடி
பூவரசு, வேம்பு, புளி, இலுப்பை, மஞ்சமுன்னா
வெட்டிப் பிளந்து விறகாக்கினோம்எல்லாம்
ஒட்டமுடிய, உள்ளேபோய் வேரெல்லாம்
தோண்டி எடுத்துச் சுடுதண்ணி வைக்கின்றோம்.
ஆண்டிகளைப் போலப் பல்லாயிரம்பேர் வீடுகளை
விட்டுப் புறப்பட்டு வீதி வழி பிள்ளை
குட்டி தொடர நடக்கும் கொடுமையிடை,
வாந்தி, இருமல், வயிற்றோட்டம், மலேரியா
சூழ்ந்து வருத்தும்; சுகப்படலாம் என்றாலோ
மாத்திரைகள்வாராவடக்கே! அதற்கென்று
யாத்திரை போக முடியுமா? கிளாலியினைத்
தாண்டும் துணிவு தமிழரிடை அதிகம்!
மீண்டும் தொடங்கும் மிடுக்கும் மிக அதிகம்!
ஆனபடியால், அயராது, இவர்கள் முன்
போன வழிவிட்டு புதுவழியிற் போகின்றார்

வர்த்தகம் செய்ய வழிகள் பல இருக்கு
யுத்த நிலைமை மிகச் சாதகமாய்த் தானிருக்கும்....

கர்ப்பூரம், சைக்கிள், கடதாசி, மின்கலங்கள்
இப்பால் வருதல் இலங்கை அரசாங்கத்தின்
பாதுகாப்புக்குப் பழுதாம்! விளக்கங்கள்
தோதாகச் சொல்வார், நாம் துக்கப்படுவதில்லை!

கோயில் விழாக்கள், குடிபுகுதல், கல்யாணம்
மாவீரர் வாரம் வெளியீட்டு வைபவங்கள்
இங்கு குறையின்றி எல்லாம் நடந்தேற
எங்கள் பொழுதும் இனிதே கழிகிறது!

காற்றுவெளியில் களக்கும் விறகுசுமை
ஏற்றி வருவோரை ஏறெடுத்துப் பார்ப்பதுண்டா?
ஓயா உழைப்புக்கு இவர்கள் உதாரணங்கள்
சாயாத சற்றும் சலிக்காத உள்ளத்தோர்!
வேலை வாய்ப்பென்று வெளிநாடு செல்வோர்தம்
எண்ணிக்கையால் பிழைப்போர் ஏராளம், ஏராளம்!
கண்ணிற் படாமல் காசோடு போனவர்கள்
ஏராளம்!
என்றாலும் இத்தனைக்குப் பின்னாலும்
தாராளமாய் ஓடும் தமிழர் தொகை அதிகம்
ஆரோடு நோக? ஆருக்குச் சொல்லி அழ?
ஊரோடு ஒத்தோடவா? உய்யவழி தேடவா?
போரோயக் காணோம் புகைமண்டலத்திடையே
ஆராரோ என்றே அவதிப் படுகின்றோம்!
ஈமத்தெழும் நெருப்பும் எரிந்து தனிவதுண்டு
சாமத்திருளும் விலக, விடிவதுண்டு
வாழ்வை நினைப்பவர்கள்
மனஞ்சோர்ந்து வாடிப்போய்
வீழ்வாரோ? காண்போம் விடிவு!

- சோ. பத்மநாதன் -


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# மக்கள் மனங்களில் தீ!
# வரலாறு காணாத எழுச்சி!

**முன்பக்க அட்டை, பின்பக்க அட்டை, 36, 37ம் பக்க புகைப்படங்களுக்குரிய விளக்கக் கட்டுரை.**









தமிழீழத்தின் தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறந்து கொண்டிருந்தது.

தமிழீழமே சோகத்தில் மூழ்கியிருந்தது. பூரணமான கடையடைப்பு, கர்த்தால் மக்களால் அனுஷ்டிக்கப்பட்டது. விடுதலைப் புலிகளின் மூத்த தளபதியும் மத்திய குழு உறுப்பினருமான கேணல் கிட்டுவையும், மற்றும் அவருடன் சென்ற ஒன்பது போராளிகளையும் அனைத்துலகக் கடலில் வைத்து இந்தியக் கடற்படை கைது செய்ய முற்பட்டபோது, அவர்கள் கப்பலைத் தகர்த்து வீரமரணமடைந்த செய்தி தமிழீழ மக்கள் மனங்களில் தீயாய் மூண்டது. தமிழீழத்தின் பத்திரிகை யாவும் அஞ்சலித்து நின்றன. சுவரொட்டிகள், அஞ்சலித்துண்டுப் பிரசுரங்கள், நூல்கள் என அச்சிட்டு அச்சகங்கள் களைத்துப்போயிருந்தன. புலிகளின் குரல் கிட்டண்ணாவுக்கு அஞ்சலி செலுத்திய வண்ணமாகவே இருந்தது. விடுதலைப்புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகம் வீரச்சாவைத் தழுவிய தோழர்களுக்கும், கிட்டண்ணாவுக்கும் சமர்ப்பணமாக ஒலியிழை நாடாவை வெளியிட்டது. புகைப்படப்பிரிவு கிட்டண்ணாவின் புகைப்படங்களை அச்சிட்டு வெளியிட்டுக் கொண்டிருந்தது.

17ம், 18ம், 19ம் தினங்களை துக்கதினமாக தமிழீழ விடுதலைப்புலிகள் பிரகடனப்படுத்தியிருந்தனர்.

மக்கள் எழுச்சி கொண்டு ஆர்ப்பாட்ட ஊர்வலங்களையும், பேரணிகளையும் நடாத்தினர். பேரணியில் கலந்து கொண்ட மக்கள் ஆவேசமாக இந்திய அரசுக்கு எதிரான கோசங்களை எழுப்பியும், சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணமுமாய் சென்று கொண்டிருந்தனர்.

நெல்லியடியில் இருந்து தீருவில் மைதானத்தை நோக்கி பேரணி சென்றது. ஊர்வலத்தின் முன்னால் யாழ். மாவட்ட தாக்குதற் பிரிவின் பாண்ட் இசைக் குழுவும், இராணுவ அணிவகுப்பும், அதன் பின்னே கடற்புலிகளின் ஆண், பெண் போராளிகளின் அணிவகுப்பும், அதன் பின் மாணவரமைப்பின் அணிவகுப்பும் சென்றது.


கப்பலில் உள்ள கிட்டண்ணாவின் உருவப் படத்திற்கு மாலை போட்டு, கிட்டண்ணாவின் தாயாரும், மனைவியாரும் கட்டியழுதது எல்லோரையும் மனங்கலங்கச் செய்தது. அக்காட்சியைப் பார்த்த மக்களும் அழுதே விட்டனர். "தமிழீழத் தேசியத் தலைவர் திரு. பிரபாகரன் அவர்கள் கிட்டண்ணாவுக்கு அஞ்சலி செலுத்த வருகிறார்" என்று சொன்னதுதான் தாமதம், தலைவர் அஞ்சலி செலுத்தும் அவ்வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியைக் காண மக்கள் முண்டியடித்தனர்.

தமிழீழத் தேசியத் தலைவர் நெஞ்சில் சாய்ந்து கிட்டண்ணாவின் தாயார் உள்ளம் குமுறி அழுதார். கடல் அலைபோல் எழுந்த மக்களோடு, கப்பலைத் தகர்த்து வீரமரணமடைந்த போராளிகளின் தாய் தந்தையர்களும் கண்ணீர் சொரிந்து அஞ்சலித்து நின்றனர். தலைவர் மலர் வளையத்தை நினைவு நடுகல் அருகே வைத்து அஞ்சலி செலுத்தினார். கிட்டண்ணாவின் தாயாரால், நினைவு நடுகல் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

அந் நடுகல் மக்கள் மனங்களில் எழுந்து நின்றது. □■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# தேசம் திரும்பி வராத கப்பல்

தேசம் திரும்பி வராத கப்பல்
தமிழீழத்துக் கரைகளை
நெருடும் காற்றில்
கலந்தொலிக்கும்.
பிரித்தறிய முடியாத தவிப்பில்
மனது வலிக்கும்.
திரும்பி வராத கப்பலின்
இரைச்சல் துயில் கலைக்கும்.
இறுதியாய் கப்பலை முத்தமிட்ட
அலை எழு விச்சு
எல்லோர் மனங்களிலும்
தொற்றியொரு மூச்சாய்...

கரை நின்று அழும்
கதை தொடரா
கடற்புலி வீரர்
எழுகின்ற நாளினித் தோழா
புரவிகள் பாயும் வண்ணம்
பொலிவோடு போய் வரும்
ஈழக் கப்பல்.
புலருகின்ற பொழுதின் வடிவாய்
தமிழீழம் மலரும்.

- சுபா -

# அன்னை பூமியில்

# பனைவளப் பயன்பாடு

www.tamilarangam.net

காலமும் தமிழும் தழுவியே வாழும் (தாலவிருட்சம் = பனைமரம்) தமிழர் பிரதேசமான தமிழகத்திலும், தமிழீழத்திலும் பனைப்பயிர் தமிழ் மக்களோடு இணைந்து வளர்கின்றது. தமிழ் மக்களின் உணவுப் பழக்கங்களில் பனை உணவு கணிசமான பங்கினை வகிக்கின்றது. அவர்களது பாவனைப் பொருள்களில் பனம் பொருள்கள் பெரும் பங்கினைக் கொண்டுள்ளன.

பனை இருந்தாலும் பல வருடம், இறந்தாலும் பல வருடம்.

எந்தவகையான தட்பவெப்ப சூழ்நிலையையும் தாக்குப்பிடித்து தளராது வளரக்கூடியது பனைமரம். சலுகை அடிப்படையிலான எந்தவித பயிர்ப் பரிபாலனமும் இதற்குத் தேவையில்லை. செயற்கையான அழிவைத் தடுத்து நிறுத்தினால் போதும். பனை தன்னைத்தானே காப்பாற்றி வளர்ந்து பயன் கொடுக்கும். வேறெந்த மரத்திற்கும் இல்லாத தனிச் சிறப்பு பனைக்கு உண்டு.

மனித வாழ்வோடு பனைமரம் பின்னிப் பிணைந்துள்ளது. மனிதரைப்போல நூறு ஆண்டு வாழக்கூடியது. பன்னிரண்டு வயது முதல் பதினாறு வயதிற்குள் பருவம் அடையக்கூடியது. தாய்ப்பாலைப் போன்ற ஊட்டச்சத்துள்ள பதநீரைத் தரவல்லது. தன் உடம்பிலுள்ள ஒவ்வொரு பாகத்தையும் தந்து மக்களுக்கு உதவுகின்றது. இளமையில் எழுத ஏட்டிலிருந்து இறுதியில் எரிக்க விறகுவரை, இடையிலே உண்ண உணவும், உறங்கப் பாயும், உறைய வீடும், இப்படி இன்னும் பல பயன்பாடுகளோடு பனையும் மனித வாழ்வும் இணைந்துள்ளது.

எனவேதான் தமிழகத்தின் மாநிலமரமாக பனைமரத்தைத் தமிழக அரசு பிரகடனப் படுத்தியது. பனைமரத்துக்குக் கொடுத்துள்ள முக்கியத்துவத்தை இதன்மூலம் உணரலாம்.

தமிழீழ நிலப்பரப்பில் சுமார் ஒரு கோடியே பத்து இலட்சம் எண்ணிக்கையுடைய பனைமரங்கள் உள்ளன. இவற்றில் சுமார் இரண்டு இலட்சம் மரங்கள் வரை தொழில் ரீதியாக பயன்படுத்தப்படுகின்றன.

பனைசார் தொழில் வருவாய் மூலம் பல்லாயிரம் குடும்பங்கள் வாழ்கின்றன. பல ஆயிரம் மக்கள் தொழில் வாய்ப்புப் பெற்றுள்ளார்கள்.

குடிசைத் தொழில் தேடித்தரும் சிறந்த மூலவளங்களுள் காத்திரமானது பனைவளம். தமிழன் கலையும் பண்பாடும் மிளிரச்செய்யும் தொழில்களுள் பனைவளக் குடிசைத் தொழிலும் ஒன்றாகும். அதிக மூலப் பொருள் அளிக்கக்கூடிய இயற்கைவளம் பனைவளமாகும்.



செல்வன் அ. யூட்சன்

அடிவேரிலிருந்து நுனிப்பாகம் வரை பயன்படுகின்றது. வருட ஆரம்பத்தில் பதநீர், பின்பு நுங்கு, அதன் பின் பனம்பழம், அதைத் தொடர்ந்து கிழங்கு, திரும்ப பதநீர் இப்படியே வருடம் பூராவும் தொடர்ச்சியாக உணவுப் பொருட்களைத் தருகின்றது. தன்னை அண்டியவர்களை வாழவைக்கின்றது.

பனைவளத்திலிருந்து 800 க்கும் அதிகமான உற்பத்திப் பொருட்கள் உருவாக்க முடியும் என்பது ஆய்வாளர்களின் கூற்றாகும்.

பனை பலவித பயன்பாடுகளை ஈட்டித்தருவதனால் கற்பகதரு எனச் சொல்லப்படுகின்றது.

## பனையிலிருந்து

ஓலை, மட்டை, நார், ஈர்க்கு, பன்னாடை, தும்பு, பதநீர், கள்ளு, நுங்கு, பனம்பழம், பனம் விதை, பனங்கிழங்கு, பூரான், ஊமல், மரம் போன்ற மூல உற்பத்திகள் பெறப்படுகின்றன.

இந்த மூல உற்பத்திப் பொருட்களிலிருந்து: பெட்டி, விசிறி, ஊமல் கரி, கடகம், சுளகு, பனாட்டு, பட்டை, கூடை, ஜாம், குட்டான், இடியப்பத்தட்டு, பழச்சாறு வகை, பாய், நீத்துப்பெட்டி, ஒடியல், கூரை, திருகணை, புளுக்கொடியல், விலங்குணவு உறி, பிட்டு, பசளை, பிறஷ், கூழ், அலங்காரப் பொருட்கள், துடைப்பம், பாணிப்பனாட்டு, பை, மதுசாரம், இனிப்புவகை, வேலி, வெல்லம், எரிபொருள், கயிறு, சீனி, மரப்பொருள், தொப்பி, கல்லாக்காரம், பனம் பாணி போன்ற இன்னும் பல நூறு பகுதிப் பயன்பாடுகளைப் பெறக்கூடியதாக உள்ளது.

கேட்டதெல்லாம் கொடுக்கும் காமதேனுவைப் போன்ற மனிதன் கற்பனைக்கும், ஆராய்ச்சிக்கும், புதிய கண்டுபிடிப்புகளுக்கும் ஈடுகொடுக்கும் வகையில் மூலப்பொருள்களை அள்ளிச் சொரிந்து கொண்டிருக்கின்றது. இந்தக் கற்பகதரு பனையை பல்மூல உபகாரி எனின் அது பொய்யாகா.

இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில் உணவுத் தேவைக்கு உதவுகின்றது. எரிபொருளாக, விறகாகப் பயன்படுகின்றது. ஏராளமானோருக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்கின்றது. தமிழீழத்துக்கு பெரும் செல்வத்தை ஈட்டிக் கொடுக்கின்றது. உள்ளூர் உற்பத்திக்குப் பெரும் மூலவளமாகத் திகழ்கின்றது. எனவே இத்தகைய

**"பனையைக் காப்போம்**
**பயனைப் பெறுவோம்"**

**நன்றி:**
**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்